[illegible]

v. 4 M10 L5 16 [illegible] 1931

[illegible], M28KN
M3;4·15
188913

641

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

30 JUN 1931

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931 ௵ ஏப்ரல் ௴ 16௳ [No. 15.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 281
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 283
3. பிஸாரோ நாடகம் - (அங்கம்-3, களம்-3.)
R. B. Sheridan 285
4. தனிப்பாடல்— (கந்தவேள்)
க. சோமசுந்திரம் பிள்ளை 287
5. சூளாமணி (உரையுடன்)
இரதநூபுரச் சருக்கம் (13—21) 288
6. யாப்பிலக்கணம்—(அடி) 290
7. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 292
8. அண்டபுராணம்—
தமிழ் வளர்ப்போர் திறமுரைத்தபடலம்
T. T. கிருஷ்ணகாந்த முதலியார், M. A. 295
9. வர்த்தமானம் 299

கலாநிலயம்

உண்மையில் உழல்வார் திறம்.

18893

3.

மெய்ம்மை என்பதை மறந்து, உண்மையை மட்டுமே நன்கு தெரிந்துகொண்டு உழல்வதால் வருந் தீமையின் மிகுதியை முன்னர் விரித்துக்காட்டினேம். மற்று, அவ்வுண்மையைத்தானும் உள்ளபடி தெரிந்து கொள்ளாமல் மற்றவர்களைத் தெருட்டப் புகுவார் திரளோ இற்றை நாள் சாலப்பெரிது. இன்னவர் தம் வாய்க்கு வந்தவாறு வழங்குவதே யல்லாமல் வகையுந் துறையுந்தெரிந்து யாதும் அவர் விளம்புவதில்லையே. மதிவலியும் செயலாற்றலு முடையவர்களென்று விவகரித்துப் பொதுசன நன்மைக்குரிய முயற்சிகளில் ஈடுபடுபவர்போல் இந்நாள் மேனாட்டில் நடமாடுகின்றவர்களுக்கும் இவ்விந்திய நடமாடுகின்றவர்களுக்கும் இடையே வேற்றுமையுளது. மேனாட்டுச் சீர்திருத்தக்காரர்களுள் பெரும்பகுதியோர்க்கு உண்மை இன்னதென்பதேனும் ஒருவாறு புலப்பட்டிருக்க, இவ்விந்திய நாட்டுச் சீர்திருத்தக்காரர்களில் பெரும்பகுதியோர் உண்மைதான் இன்னதென்பதும் உட்கொள்ளும் வகையின்றிச் சிற்சில சொற்களைச் சிறிதும் இளைக்காமல் இயம்பிய வண்ணமாயிருக்கக் காண்கின்றோம். இவர்களுடைய கட்டுரையில் எல்லா வாக்கியங்களும் ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்கும். பழைய பழைய செய்திகளையே புதிய புதிய இரகசியங்கள்போல் ஊக்கமுடன் மொழிகின்றுரைப்பார். மேனாட்டு விடயங்களைப்பாராட்டி, நம்நாட்டு விஷயங்களைச் சிறிது பரிகசித்து, இடையிடையே "அன்பு அருள்" போன்ற சில உயர்ந்த சொற்களைச் செருகிவிட்டால், உலக முன்னேற்றத்திற்கு உற்றவாறெல்லாம் உரைத்துவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி, உரைத்தவர் கேட்டவர் ஆகிய இருதிறத்தோர் மாட்டும் எஞ்சுகின்றது.

இவ்வாறு நிகழ்வதெல்லாம், காலத்தின் கொடுமையே யன்றிக் கழறிநிற்பவர் தகுதியின்மையின் காரணத்தால் நேர்கின்றதென்பதற்கில்லை. ஏனெனில் கல்வியேனும் அறிவேனும் ஒழுக்கமேனும் சிறிதுமில்லாக் கயவர்களிற் பலர் சீர்திருத்தக்காரர்களாய்த் தலைவிரித்தாடுவது எந்நாட்டிலும் எக்காலத்திலும் இயல்கின்றதேனும், கல்வி ஒழுக்கம் தூயவாழ்க்கை முதலிய பெருமைவாய்ந்தவர்களிற் சிற்சிலரும்,எல்லாரும் சொல்வதையே தாங்களும் சொல்லிக்கொண்டு மெய்ம்மை ஒருபுறமும் தாங்கள் ஒருபுறமும் ஆவதுடன் நில்லாமல் உண்மையும் உணராத சில முரண்மொழிகளில் மூழ்கக் காண்கின்றோம். இப்பின்னவர் திறத்தைச் சேர்ந்த ஒருவருடைய கட்டுரையொன்றிலிருந்து ஒரு சிறுபாகத்தை எடுத்து இதன்கீழ் வரைகின்றோம். 'தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்' என்னுந் தலைப்புடையது அது:—

"உடம்பைப்பற்றிய இவ்விரண்டு குறைகளையும் இங்ஙனம் எளிதிலே நிரப்பிக்கொண்டு, அதற்குமேல்

அவற்றில் (மேனாட்டார்) தம் கருத்தைச் செலுத்தாமல், தம் அறிவு ஆராய்ச்சிகளை மேன்மேற் பெருக்குவதிலும், நாடோறும் புதிய புதிய ஆற்றல்களையும், புதிய புதிய பொறிகளையும், புதிய புதிய உண்மைகளையும் கண்டுபிடிப்பதிலும், அவற்றைப் பயன்படுத்துவதிலுமே தமது கருத்தை ஓயாமற் செலுத்திவருகின்றனர்.

"மற்று, நம் நாட்டவரோ மேலே காட்டியபடி, நிலையில்லாமல் அழிந்துபோகுந்தமது உடம்பைப்பற்றியும், அவ்வுடம்பால் வந்த தொடர்புகளைப்பற்றியுமே எந்நேரமும் பேசியும் நினைந்தும் வருவதல்லாமல், என்றும் நிலையாக இருக்கத்தக்க தமது அறிவுவிளக்கத்தைப் பற்றியாதல், தம் அன்பையும் அருளையும் வளர்க்குங் கடமைகளைப் பற்றியாதல் பேசியும் எண்ணியும் வரக் காண்கின்றோம் இல்லையே!

"இன்னும், நமது வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவன கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளும் என்னும் இரண்டுமேயாகும். கல்விப்பொருளைப்பெற்றவர்கள், தமக்கும்பிறர்க்கும்நன்மையைத் தருந் துறைகளை ஆய்ந்துபார்த்துக் காலத்தின் நிலைக்கும் இடத்தின் நிலைக்கும் ஒத்த முயற்சிகளைச் சோம்பாது செய்வார்களாயின், அவர்கட்குச் செல்வப்பொருள் தானே வரும். வெறுஞ் செல்வம் மட்டுந் தமது பழவினைப்பயனால் வாய்க்கப் பெற்றவர்கள், அங்ஙனங் கல்விப்பொருளை எளிதிலே பெற்றுக்கொள்ளுதல் இயலாது. மேலுங் கல்விப் பொருள் என்றும் அழியாது, செல்வமோ சில காலத்தில் அழிந்துபோம்; கல்விப் பொருள் ஒருவனது அறிவைப் பற்றிக்கொண்டு எழுமைஎழுபிறப்பும் அவனுக்கு உற்றதுணையாய்ச் செல்லும்; செல்வமோ அதனை யுடையானுக்கு இந்தப் பிறவியிலேயே துணையாகாமற், பிறராற் கவரப்பட்டு, ஓரோ வொருகால் அவனுயிரையுந் தொலைத்தற்கு ஏதுவாயிருக்கும். கல்விப்பொருள் இந்தஉலகத்திலும், இங்குள்ளஉயிர்களிலும் உள்ள வியப்பான உண்மைகளை விளங்கச்செய்வதுடன், இவற்றிற்கு உள்ளுமாய்ப் புறம்புமாய் நிற்கும்இறைவன்றன் அருளுண்மைகளையும் விளங்கச்செய்து நமக்குப் பேரின்பத்தைத் தராநிற்கும்; செல்வப் பொருளோ தன்னையுடையானைப் பெரும்பாலுந் தீய துறைகளிற் புகுத்திச் சிலகாலத்தில் அவன் சிற்றின்பத்தினையும் நுகரவொட்டாமல் அவனை நோய்வாய்ப்படுத்தி, அவனை விட்டு நீங்கி அவனை விரைவில் மாய்க்கும். ஆகையால், கல்விப்பொருள் சிறந்ததோ, செல்வப்பொருள் சிறந்ததோ ? என்பதைச் சிறிது எண்ணிப்பாருங்கள். கல்விப்பொருள் ஒன்றுமே நமக்கும் நம்மைச் சேர்ந்தார்க்கும் நலம்பயப்பதன்றிச், செல்வப்பொருள் அங்ஙனம் நலம் பயப்பதன்று என்பது சிறிதுணர்வுடையார்க்கும் விளங்குமன்றோ? ஆகவே, கல்விப்பொருளின்பொருட்டுச் செல்வப்பொருளை [illegible] வேண்டுமேயல்லாமல், செல்வப்பொருளைப் பெறும் பொருட்டே கல்விப்பொருளைப் பயன்படுத்துதல் ஆகாது.

"ஆனால், நம் நாட்டவர் நிலை எத்தன்மையதாயிருக்கின்றதென்பதை எண்ணிப்பாருங்கள், நம்மவரிற் பெரும்பாலார்க்குக் கல்வி கற்பதிற் சிறிதும் விருப்பமேயில்லை. கற்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளவர்களுந் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தாற்போதுமென்றும், அதுவும் வேண்டாம், கையெழுத்துப் போடத் தெரிந்தாற் போதுமென்றும் எண்ணி, அங்ஙனமே நடப்பவர்களாய் இருக்கின்றார்கள். இன்னும் பலர் "தமிழ்ப் படித்து என்னவாரிக்கொள்ளப் போகின்றான் ? படியாதவர்களில் எத்தனையோபேர் பொருள் தேடிச் செல்வர்களாக வில்லையா?" என்று வாய் கூசாது பேசிப் போகின்றனர். இன்னும் பலர், "ஆங்கிலம் படித்தாலும் பெரிய வேலை கிடைக்கும், பெரிய அதிகாரங் கிடைக்கும், ஆங்கிலம் படித்துப் பட்டம்வாங்கினமாப்பிள்ளைக்கு ஐயாயிரம் பத்தாயிரத்துடன் பெண் கிடைக்கும்" என்று எண்ணுவதுஞ் சொல்லுவதுஞ் செய்து, இவைகளுக்காகவே தம் மக்களை ஆங்கிலம் பயிலச் செய்கின்றார்கள்."

இம்மொழிகளை நம் கலாநிலய நண்பர்கள் உற்றுநோக்கிச் சிறிது ஆராய்தல் வேண்டும். "தமிழ் நாட்டவர், தம் உடம்பைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்க, மேனாட்டவர் சிலவற்றைக் கண்டுபிடித்துப் பயன் படுத்துவதிலுமே தம் கருத்தை ஓயாமற் செலுத்திவருகின்றனர்,' என்கின்றார் இக்கட்டுரையாளர். இதனை மிகுதிபற்றியே உரைத்தனர் என்பதற்கையமில்லை. ஆயினும், மேனாட்டவர் தம் முயற்சிகளை எவ்வகையில் பயன் படுத்திக்கொள்கின்றனர் என்பதை இயம்பவில்லை. மற்று இவர் தமிழ்நாட்டவர்பால் காண்கின்ற குறையின்படியே மேனாட்டவரும், "தம் அன்பையும் அருளையும் வளர்க்குங் கடமைகளைப்பற்றிப்பேசியும் எண்ணியும் வர"க் காண்கிலோம். அன்பையும் அருளையும் வளர்ப்பவர் அவராயின் நமக்கு அரசியல்தொல்லைகள் இன்றைக்கு இத்துணை வேண்டாவே. அருட்செல்வமன்று, பொருட் செல்வத்தைப் பெருக்கும் வகையிற்றான் மேனாட்டார் தம் அறிவையும் ஆற்றலையும் கல்வியையும் பயன்படுத்திக்கொள்ளுகின்றனர் என்பதே உண்மை. அவ்வுண்மையை இக் கட்டுரையாளர் மறந்தனர். கல்விமுறையை அம் மேனாட்டவர் செல்வப் பொருளீட்டுதற்கோர் கருவியாய்க் கொண்டிருப்பது போலவே நம்மிற் பெரும் பகுதியோரும் இன்று கருதிவிவகரிப்பதும் உண்மை. எனினும் மேனாட்டவரைப்போல் நாமும் பயன்படுத்திக் கொள்ள முயலவேண்டும் என்று முதலில் உரைத்துவிட்டுப் பிறகு அவ்வாறு பயன்படுத்திக் கொள்ளவரும்போது 'அது கூடாது' என்று தகைகின்றார். இவை விந்தையுமன்று. உண்மையை உணராததால் விளையும் பயனில் மொழிகள் இவை. உண்மையை மாத்திரம் உணர்ந்து மெய்ம்மையை அறியாத ஷாமல்ஹௌஸன் போன்றவர்தம் நயனில் மொழிகளைக்காட்டியும் இத்தகைய பயனில்மொழி[illegible] பெரிது அஞ்சுவார் வள்ளுவனார்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

24. யோகம்

[265-வது பக்கத் தொடர்ச்சி]

இந்திரிய மடக்குதல். அதாவது, நாக்கு ருசியான பண்டங்களைத் தேடும். அதன்வழிச் செல்லலாகாது. பசிக்கு உணவுகொள்ள வேண்டுமன்றி ருசிக்கு உணவுகொள்ள லாகாது. கண்ணால் காணப்படும் அழகிய பொருள்களைக் கண்டு மயங்கலாகாது. அதைத் தடுத்தல் வேண்டும். சங்கீதத்தில் பிரியப்பட்டு ஞான சம்பந்தமின்றி, இறைவனைப் பேணாது ராகச்சுவையில் விழலாகாது. வாசனைகளில் பிரியமாய் அவற்றின் வழிச்செல்லல் மூக்கின் குற்றமாகும். பரிசம், கண்டதை இச்சித்துத் தொடுதல் குற்றமாம். சாதன சாதன சதுஷ்ட்டியத்தில் சமாதி சட்க சம்பத்து என்று கொள்ளும் அறுவகைப் பெருஞ் சாதனப் பேற்றி லிரண்டாகும் சமமும், தமமுமாம்.

"சமமகக் கரணதண்டம் தமம்புறக் கரணதண்டம்" (கைவல்லியம்) என்பதே இந்திரிய மடக்குதலென இயமத்தில் யோகாப்பியாசத்திற்கு இன்றியமையாததென வெடுத்துக் காட்டப்பட்டது. இந்திரிய மடக்குதலைப்பற்றி அப்பர் தேவாரத்தில் நூற்றுக்கணக்காய்ப் பாசுரங்கள் எடுக்கலாகும். குழந்தைகளுக்குப் போதிப்பதுபோல் திருவங்கமாலையில்,

> கண்காள் காண்மின்களோ—கடல்
> நஞ்சுண்ட கண்டன் றன்னை
> எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
> கண்காள் காண்மின்களோ!
>
> செவிகாள் கேண்மின்களோ—சிவன்
> எம்மிறைச் செம்பவள
> மெறிபோன் மேனிப்பிரான் றிறமெப்போதும்
> செவிகாள் கேண்மின்களோ!
>
> மூக்கே நீ முரலாய் முது
> காடுறை முக்கணனை
> வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
> மூக்கே! நீ முரலாய்.

என்று மூன்று இந்திரியங்களை விளித்துத் திடஞ் செய்து, நாவால் பயனடையும் வாயைக்கண்டு, நாக்கின் பயனிது வென்பதுபோல்,

> வாயே வாழ்த்து கண்டாய் மத
> யானை யுரிபோர்த்துப்
> பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றன்னை
> வாயே வாழ்த்து கண்டாய்.

என்று கூறி, இவ்வாழ்க்கைக்குச் சிவலிங்கத்தைத் தழுவி வரக்கூடிய இன்பத்திற்கு மேலாம் பரிசஇன்பம் யாதுமில்லையெனக் கூறுவதுபோல்,

> ஆக்கை யாற்பயனென்—அரன்
> கோயில் வலம்வந்து
> பூக்கையா லட்டிப் போற்றி யென்னாதவிவ்
> வாக்கை யாற்பயனென்?"

என்று பஞ்சேந்திரிய நிக்ரஹ செய்வதைக் காண்க.

பஞ்சேந்திரியங்களின் கொடுமையைப் பற்பலவிதங்களால் அப்பர் பாடுவதை அவர் தேவார முற்றும் காணலாகும்.

> கூட்டமா யைவர் வந்து கோடுந்தொழில் குணத்த ராகி
> யாட்டுவோர்க் காற்ற கில்லே னாடர வசைத்த கோவே!
> காட்டிடை யரங்க மாக யாடிய கடவுளேயோ! [ளானே
> சேட்டிரும் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து

திருக்கொண்டீச்சரம் - திருநேரிசை 4.

> போறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
> நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
> அறிப்பு றுமமு தாயவ னேகம்பம்
> குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே.

திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 4.

> புலன்களைந்தா லாட்டுண்டு போதுபோக்கிப்
> புறம்புறமே திரியாதே போது நெஞ்சே
> சலங்கொள் சடைமுடியுடைய தலைவா வென்றும்
> தக்கன்செய் பெருவேள்வி தகர்த்தா யென்றும்
> இலங்கையர்கோன் சிரநெரித்த விறைவாவென்றும்
> எழிலாரூ ரிடங்கொண்ட வெந்தா யென்றும்
> நலங்கொளடி யென்றலைமேல் வைத்தா யென்றும்
> நாடோறு நவின்றேத்தாய் நன்மை யாமே.

திருவாரூர் - திருத்தாண்டகம் 10.

பஞ்சேந்திரியங்களை முற்றும் வெல்வது மிகவும் கடினமாயினும் சிறிதாயினும் வென்றாலன்றி யோகத்தின் மேற்படிகளில் கால்நிலைப்பது கடினமாகும். இதைத் தாயுமானவரும்

> "ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
> தெய்வ அறிவே சிவமே பராபரமே" என்றார்.

பராபரக்கண்ணி 252.

இனி நியம மென்பது யாதெனக் காண்போம். நியமமாவது—தவம், தூய்மை, தத்துவநூல் ஓர்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல் என்பன. அவற்றுள் தவமாவது இருவகைத்து. காமியார்த்தம், நிஷ்காமியார்த்தம் என்பன காமியார்த்தம் ஒரு பெரும் பொருளை இச்சித்துச் செய்வது. நிஷ்காமியார்த்தம் அவ்வாறு இச்சையின்றி மோட்சத்தைக் கருதிச் செய்வது, "தளிசாலைகள் தவமாவது தம்மைப் பெறிலன்றே" என்று பாடிய வன்றொண்டர், தவத்திற்குப் பயன்படாதவர் இவரென எச்சரிப்பதைக் காண்க:—

> [சிலர்கள்
> உழக்கேயுண்டுபடைத்தீட்டிவைத் திழப்பார்களுஞ்
> வழக்கேயெனிற்பிழக்கே யென்பர்மதிமாந்தியமாந்தர்
> சழக்கே பழி நிறைப்பாரோடு தவமாவது செயன்மின்
> கிழக்கேசல மிடுவார் தொழு கேதாரமென் னீரே,

[குறிப்பு "கிழக்கே சலமிடுவது" நிஷ்காமிய தவத்தில் ஒரு பாகமாம்]

தூய்மையாவது புறத்தூய்மை அகத்தூய்மை என இருவகையுடையது. முதலில் நாம் புறத்தூய்மையை முக்கியமாய்க் கவனிக்க வேண்டியதே. ஏனெனில் தேகம் பரிசுத்தமாயில்லாவிடின் வியாதியால் பீடிக்கப்படும். பிணியன் கல்விக்குப் பயன்படானெனில், யோகத்திற்கும் பயன்படான். புறத்தூய்மையு மின்றி

உழன்ற சமணரைக் குறித்துத் திருநாவுக்கரசு நாயனர் தனது நெஞ்சை விளித்துக் "கடுப் பொடியட்டி மெய்யிற் கருதியோர் தவமென்றெண்ணி, வடுக்களோ டிசைந்த நெஞ்சே" எனப் பழிப்பவர்.

பாசிப்பன்மாசு மெய்யர் பலமிலாச் சமணரோடு
நேசத்தா லிருந்த நெஞ்சை நீக்குமா றறியமாட்டேன்
தேசத்தார் பரவி யேத்தும் திருவையா றமர்ந்த தேனை
வாசத்தால் வணங்க வல்லார் வல்வினை மாயு மன்றே

திருவையாறு - திருநேரிசை 4.

என்று பாடுவதைக் காண்க. தேகத்தைப் பாழாக்கும் தவம் ஒரு தவமன்று. ஏனெனில் இத்தேகத்தைக் கொண்டன்றோ நாம் அழியாப்பதம் தேடவேண்டியிருக்கின்றது. மேலே ஏற்றுவிக்கும் இவ்வேணியை அலட்சியம்செய்பவன் எவ்வாறு அதனைக் கொண்டு உய்யப்போகிறான்? ஆகவே புறத்தூய்மை முன்னர்க் கவனிக்கதேண்டிய தென்பதே ஆன்றோர் துணிவு. ஆயினும் புறத்தூய்மையுடன் நின்று அகத்தூய்மை யின்றேல், அது மறுமைப்பயனைத் தாராது*:—

காலை சென்று கலந்துநீர் மூழ்கிலென்
வேலை தோறும் விதிவழி நிற்கிலென்
ஆலை வேள்வி யடைந்து வேட்கிலென்
ஏல வீசனென் பார்க்கன்றி யில்லையே.

பாவநாசத் திருக்குறுந்தொகை - 5

வெப்பத் தின்மன மாசு விளக்கிய
செப்பத் தாற்சிவ னென்பவர் தீவினை
ஒப்பத் தீர்த்திடு மொண்கழ லாற்கல்ல
தெப்பற் றும்மில னெந்தை பிரானிரே.

மனத்தொகைத் திருக்குறுந்தொகை - 7.

எனவே இருவகைத்தூய்மையும் யோகிகளுக்கு இன்றியமையாதன வென்னலாம். நியமத்தில் மூன்றுவதாகக் கொள்ளப்படுவது தத்துவநூல் ஓர்தல். ஏனெனில் நல்லுணர்வு பெறுவதற்கு இது கருவியாகும்.

உலகத்தில் தத்துவ நூலுணர்ச்சி யின்மையாயிருப்பது, தன்னிடத்திலும் உண்டென்று கூறுவதுபோல்,

கற்றிலேன் கலைகள் ஞானங்
கற்றவர் தங்க ளோடு
உற்றிலே னாத லாலே யுணர்வுக்குஞ்
சேய னானேன்
பெற்றிலேன் பெருந்த டங்கட்
பேதைமார் தமக்கும் பொல்லேன்
எற்றுளே னிறைவ னேநா
னென்செய்வான் தோன்றி னேனே.

மாட்டினேன் மனத்தை முன்னே
மறுமையை யுணர மாட்டேன்
மூட்டிநான் முன்னை நாளே
முதல்வனை வணங்க மாட்டேன்
பாட்டினாப் போல நின்று
பற்றதாம் பாவந் தன்னை
ஈட்டினேன் களைய மாட்டே
னென்செய்வான் றோன்றி னேனே.

குறைந்த திருநேரிசை, 2, 3.

என்பர். ஆயினும் தத்துவநூலுணர்ச்சி யொன்றே ஞானமென்று எண்ணலாகா தென்பது அப்பர் துணிவு:—

பட்ட ராகிலென் சாத்திரம் கேட்கிலேன்
இட்டு மட்டியு மீதொழில் பூணிலென்
எட்டு மொன்று மிரண்டு மறியிலென்
இட்ட மீச னொருதவர்க் கில்லையே!

வேத மோதிலென் சாத்திரங் கேட்கிலென்
நீதி நூல்பல நித்தல் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிலென்
ஈசனை யுள்கு வார்க்கன்றி யில்லையே.

பாவநாசத் திருக்குறுந்தொகை.

தத்துவநூல் கற்கவேண்டியது அவசியமே. அதைக் கசடறக் கற்றபின் அதற்குத் தக்கவாறு ஒழுகாவிடின் யாவும் வாசா கைங்கரியமாய் முடியும்.

நியமத்திற் சிறந்தது தெய்வவழிபாடு. உபசனா மூர்த்தியே தோழனுமாய்த் துணைவனுமாய் ஆசாரியனுமாய் நல்வழி காட்டுவதாம்.

மற்று நற்றவம் செய்து வருந்திலென்
பொற்றை யுற்றெடுத் தானுடல் புக்கிறக்
குற்ற நற்குரை யார்கழற் சேவடி
பற்றி லாதவர்க் குப்பய னில்லையே.

பாவநாசத் திருக்குறுந்தொகை - 10.

அரக்கன் வல்லரட் டங்கொழித் தாரருள்
பெருக்கச் செய்த பிரான் பெருந்தன்மையை
யருத்தி செய்தறி யப்பெறு கின்றிலர்
கருத்தி லாக்கய வக்கணத் தோர்களே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை - 10.

இலங்கை மன்னனை யீரைந்து பத்துமன்
றலங்க லோடட னேசெல வூன்றிய
நலங்கொண் சேவடி நாடொறும் நாடொறும்
வலங்கொண் டேத்துவார் வானுல காள்வரே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 30.

ஆகையால் இருவகை யோகங்களுக்கும் அடிப்படையாயுள்ள இமய நியமங்கள் இல்லற வாழ்க்கை ஒரு சற்புருடன் செய்யவேண்டிய காரியங்களாகவேயிருக்கின்றன. இவற்றால் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் இம்மையிலே சுகமும் நல்ல இன்பமும் எய்து மென்பது வெளியாகின்றது. இத்தன்மையான நல்லொழுக்கங்க ளில்லாவிடில் யோகசாதனங்களுக்குப் பற்பல இடையூறுகள் நேரும். சேனைகளை ஏவுவதற்குமுன்னர் வழியிலுள்ள காடுகளைக்களைந்து நற்பாதை ஏற்படுத்துவதுபோல் இச்சாதனங்கள் யோகத்திற்குத் தக்க பாதைகளாம்.

*"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலு மரனுக்கன் பில்லையேல்
ஓடி நீரை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திடு மூர்க்கனோ" டொக்குமே.

பாவநாசத் திருக்குறுந்தொகை-9

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[267-வது பக்கத் தொடர்ச்சி]

மூன்றுவது அங்கம்.

எல்விரா:—இதோ! பிஸாரோ! உனது புன்மதியைக்காண என் நெஞ்சம் பதைக்கின்றது—கோபம் கொதித் தெரிகின்றது.

பிஸாரோ:—உனது பேதைமதி எதன்மீது நோக்கம் வைத்திருக்கின்றதோ இப்பொழுது? அவன் என் சத்துருவாயிற்றே. என் வசத்திலு மிருக்கின்றான்.

எல்விரா:—உன்வசத்தி லிருப்பதினாலேயே அவனுன்சத்துருவாகமாட்டான். பிஸாரோ!நானுன்னிடம் நல்லறமொன்றும் எதிர்பார்க்கவில்லை, பெருந்தன்மை பாராட்டச் சொல்லவில்லை. நீ பெற்றிருக்கும் கீர்த்திக் கேற்ற கருமந்தானே செய்யச்சொல்கின்றேன். உனது மேதகு சிறப்பிற்கு நீயே கொலையாளியாய் வந்து விளையாதே. எல்விராவைக் கவர்ந்ததைவிட மேலான பயன் நீ யீட்டிய புகழிற்கு யாதுளதென்று ஆயிரம்முறை உரைத்துளா யன்றோ? நான் மற்றெல்லாரையும்போல் உண்டுறங்கிக் காதலன் தன் புன்னகையையும்மக்களின் மதலைச்சொற்களையும் கண்டுகேட்டுக்களிப்புடன் நாட் கழிக்கும்பொதுஉலக மாதர்களுள் ஒருத்தியல்லளென்பது உனக்குத் தெரியும். இல்லை! கைக்கொண்ட காதலனைக் கடவுளாய்க் கொண்டாடப் பிறந்தவள் நான். அவனது புகழின் இசையையன்றி வேறெந்த கீதத்தையும் ஏற்கா என்செவிகள். அவனது தீரச்செய்கைகளின் மகிமைகளன்றி வேறெதையும் என் உதடுகள் பிதற்றா. உனது நாடும் அரசனும் உனக்கு நன்றி பாராட்டிச் சொரியும் உபசாரணைகளை ஓதிஓதி ஆனந்தப் பரவசமாகி விடுவேனே. வெற்றிமாலை சூடிவரும் என் கொற்றனை எதிர்கொண்டழைக்கும் முரசினும் அதிகமாய்ப் படபடக்குமே எனது இருதயம்; எனது பதிபக்திக்கும் கரையுண்டோ!-நானே வேறோ-வேறு பாசமுமுளதோ எனக்கு—என் பிரபஞ்சமே நீ யன்றோ! காதல்கொள்வது சபலமெனினும், இவ்விதக் காதல் சாதாரண சபலமன்று — பிஸாரோ எனக்கு உன்மே லிருந்த காதல் இத்தகைய தன்றோ?

பிஸாரோ:—இத்தகையதேதான். எல்விரா!

எல்விரா:—ஆயின்— என்னைப் படுநாசமாக்கிய பெருமோசத்தின் போர்வையைக் கதுமெனக் கிழித்தெறிந்து என்னையே எனக்குக் கொடியதோர் சத்துருவாக்கி வைக்காதே! உனக்கிருக்கும் சக்தியால் இக்கொடுமை தற்காலம் என்னதான் பொன்மயமாய்த் தோன்றப் பெற்றாலும், நாளடைவில் அப் பொன்பூச் செல்லா மழிந்துபோய், நீ செய்த வதைதான் முன்னிற்கும். எல்லோராலும் சபிக்கப்பட்டுப் பாழாவாய், உலக நிந்தனையே உனக்குக் கிடைக்கும் ஊதியம்.

பிஸாரோ:—தற்காலம் பழிதீர்த்தானந்திக்கிறமல்—பின்வருவோர் வழங்குஞ்சில புகழ்மொழிகளைக் கேட்டு, கல்லறையில் உலர்ந்துகிடக்கும் என் எலும்புகள் குலுங்க நகைத்திருக்குமென் றெண்ணுகின்றனையோ, பேதாய். இம்மையை அனுபவித்தறியாத மடையர்கள் எதிர்பார்க்கும் கீர்த்தியது. நானறியேனதை. இக்காரியத்தால் உயிருள்ள கீர்த்திபெற்று, எண்ணமும் கைகூடி, பகைவரும் நசித்து எனது ஆட்சியும் மேம்பட்டோங்குமே. இது தெரியா துனக்கு!

எல்விரா:—நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவைகளைக் கேட்கும் ஒவ்வொரு நிமிஷமும், நானுனைப்பற்றிக் கொண்டிருந்த வீண்மாய எண்ணங்களினின்றும் என்னைத் தெளிவிக்கின்றன. பெரும் பேர்பெற்ற சிற்றறிவுடையாய்—மெய்யாய கீர்த்தியும் நீதி சான்ற மகிமையும் இன்னதென்று உணர்ந்தறிய நீ பிறந்தவ னல்லனென்று இப்பொழுதுதான் தெரிகின்றது. போ! அழியாப்புகழ் ஒரு புறமிருக்க, நாளைக்கு நிலையாத் தற்புகழ்ச்சியைத் தழுவி நீ நாசமாய்ப்போ! விசும்பிலெழும் விண்மீன்களைக் கண்ணுற்று வியப்பதற்கு மாறாகக் கீழ்குனிந்து உன் காலிற்படும் மணல்களைக் கண்டு களிக்கின்றனையே. போ! போ! செருக்கினாலுண்டாகும் பேராசைக்குத் தலைமைபூண்டோய்—"புகழ்" என்னும் தெய்வத்தை இவ்விதந்தான் ஆராதிப்பதோ! சுயநயக்கொடுமையைக் கையாண்டு கீர்த்தி பெறப் புகுவோன், அவள் கோயிலின் வாயிலுக்கு வெளிநின்று வருவோர்போவோரை இரந்து, நிலையற்ற பிச்சைப்புகழிற்குப் பேழ்வாய் திறக்குமொரு கீழ்மகனாவான். கிடைத்த சிற்சில புகழ்ப்பேச்சும் அவனுக்கு முன்பே அழிந்து மண்ணொடுமண்ணாய் உகுந்துவிடும். சந்நிதிமுன் சென்று அம்மனிடமே, நித்திய புகழ்வரம் பெற அவனுக்குத் தகுதியோசிறிதுமில்லை.அணுகவும் துணியான். சந்நிதியில் வைக்கத் தகுந்த சுயநயமற்ற கருமங்களாகிய, சிறந்த நைவேத்தியம் ஒன்றுமில்லை அவன் கைகளில். பரோபகார சிந்தையுள்ள மெய்ந்நெறி தவறா மேன்மக்களது திப்பிய உருவங்களே நக்ஷத்திரமாக மாறி விண்ணிற்பொதிந்து, ஜோதி மயமான அவர்களது பிரதாபஞாபகத்தைச் சாசுவதப் படுத்தி வைக்கின்றன. ஆகையாற் பிஸாரோ, —

பிஸாரோ:—எல்விரா, இவ்விடம்விட்டுப் போ!

எல்விரா :—பிஸாரோ, என்மீ துனக்கினி ஆசையில்லை.

பிஸாரோ :—அதுவன்று எல்விரா. எனக்கென்னென்ன சந்தேகந்தான் தோன்றுது—ஓர் அன்னிய ஆடவனுக்காகநீஇவ்வளவு பரிவது—விந்தையே! என் மேலேவின வசைகளை மீட்டுக்கொள்.

எல்விரா :—இல்லை, பிஸாரோ, இதுவரையிலுங் கூட நீ என்னை முற்றிலும் இழந்தவனாகமாட்டாய். என் னுயிரை யுன் விதியுடன் கட்டியிருக்கும் பாசக் கயிறு இன்னுங்கூட வொன்றிருக்கின்றது. வேண்டா—என்மேல்ஆணை—எனக்காகவாவது அவ்வொரு பாசத்தையும் அறுத்து விடாதே! வேண்டா! அலான் ஸோவின் இரத்தத்தைச் சிந்தாதே!

பிஸாரோ:—யான் செய்வதென்று ஒருமுறைதுணிந்த வொன்றை மாற்றுவதென்பது இயலாது.

எல்விரா:—என்ன! அக்கணமே நீ எல்விராவை அடியுடன் துறப்பதானாலும்?

பிஸாரோ:—ஆம். அப்படித்தான்!

எல்விரா:—பிஸாரோ, கவுரவத்திற்காக வேண்டாம், கண்ணோட்டத்திற்காக வேண்டாம்; என்மேலுள்ள காதலுக்காகவாவது சற்றுச் செவிகொடுக்கலாகாதா! உன்பொருட்டு நான் என்னென்ன துறந்தேனென்பதைச் சிறிது எண்ணிப்பார். பெற்றோர், உற்றோர் மானம் மற்றவர்மதிப்பு சுயதேசம்! இத்தனையும் உன்நிமித்தம் இழந்தேன். உடன்போகி யுன்கைப்பற்றிக் கடல்நடுவில் மூழ்கி இறக்கவும் இணங்கியானிருக்கவில்லையா? உனக்குற்ற இடுக்கண்களைநானும் அடுத்துநின்றே னன்றோ! புயலடிக்கக்கொதித்தெழும் கடல் நடுவிலும்!-பகைகொண்டு வெருட்டும் பாதகர்களருகிலும்!! கடவுளே! ஹா! கொடிதிற் கொடியநாள் இன்றுகூட, பிஸாரோ நிலைகுலைந் தோடுகையில் அவனுடனின்று மார்பு கொடுத்தது யார்?—இன்றுகூட உன்மீது சீறிப் பாய்ந்த வெஞ்சரத்தை இடைதடுத்து உன்னைக் காத்துவைத்த மெய்க்கவசம் எனது மார்பேயன்றோ?

பிஸாரோ:—இயம்பிய தவ்வளவும் உண்மையே! காதலில் மாதர்களுள் மணி நீ. போர்க்களத்தில் வீரர்களெல்லாம் நின்னைக் கண்டன்றோ தம் ஆண்மை கற்றனர். ஆகையாற்றான் என் முழு இருதயமும், யான் ஈட்டிய பொருளிற் பாதியும் உனக்கு உரியதாகும்.

எல்விரா:—உனது இருதயத்தை மாத்திரம் நானடைந்தேனென்பது நிச்சயமாயின் மற்றதற்குள்ள உரிமையை யெல்லாம்—அலான் ஸோவின் உயிரிற்கு மாறுகக்—கைவிட்டு விடுகின்றேன்.

பிஸாரோ:—விட்டுவிடு! நானே இரண்டொரு நாட்க ளவனைக் கொல்லாது பொறுத்திருந்தாலுமிருப்பேன். ஆனால் நீ பரிந்துரைக்கும் ஒவ்வொரு வார்த்தையும், அவனுக்கிருக்கும் ஆயுளைக் குறுக்கித் தூக்குமரத்திற்குத் துரிதமாய் அவனைத் துரத்தித் தான் செல்கின்றது.

எல்விரா:—ஆயின், அலான்ஸோ பொழுதுபுலருமுன் உயிர்துறக்கின்றான்?

பிஸாரோ:— இச் சூரியன் இன்று சாய்வதற்கும் ஐயமுண்டோ! அவன் மறுபடி உதயமாகாமலும் போவானோ! அவ்வளவு நிச்சயந்தான் அலான்ஸோ இறப்பது.

எல்விரா:—ஆயின் நடக்கட்டும்—எஞ்சியிருந்த அவ்வொரு கயிறும் அறுந்துவிட்டது — அதனை இணைத்தலென்பது இனி ஒரு நாளுமில்லை. எனின், என்னைப் பார் — நான் நிச்சயித்த சிற்சில எண்ணங்களை இதன்முன் மாற்றவேண்டிநேர்ந்திருக்கலாம்; இப்பொழுது பார் என்னை-நிர்க்கதியான ஓர் சத்துருவை இரக்கமென்பது சிறிதுமின்றி — செருக்கு மேலிட்டுச் சீறிப்பாய்ந்து, குரோதமுடன் இகழ்மொழி பொழிந்த உன் உதடுகள் இனி யொருபொழுதும் எனது காதற்குறிகளொன்றும் அருந்தா! நிரபராதியான புருஷனொருவனைச் சித்திரவதை செய்யச் சிறிதும் நடுங்காத இரத்தவெறி கொண்ட வுனது கைகளை எனது கரங்களும் அன்புடன் இனிப்பற்றுமோ! பிஸாரோ, நான் சொல்வதை இகழாதே. என் மொழிகளை மதியாது மோசம்போகாதே. உரைத்தேன், உரைத்தேன். என்னகத்திலே பிறங்குமிந் நினைவுகள் இகழத்தக்கன வன்றென்பது எனக்குத் தெரியும். என்னைப்போல் எண்ணுதவர் இழிதகைக் கயவர். எண்ணியும் நான் செய்யப்போவதைப் போல் செய்யாதவர் பாதகர்!

பிஸாரோ:—முழுவதும் கேட்டேன். எல்விரா! உனது நோக்கத்தின் பெருந்தன்மையினளவும் நன்கு விளங்கிற்று—நிரபராதிகளுக்குப் பரிந்துபேச நீயே ஏற்ற நியாயவாதி! இளவழகன் அலான்ஸோமீது நீ வைத்திருக்கும் இந்த இளகிய அன்பெலாம் வீண் போகின்றதே என்றுதான் வருத்தமா யிருக்கின்றது! சூரியோதயத்தில் அலான்ஸோ சாகின்றான்.

(போகின்றான்.)

எல்விரா:—நல்லது! நான் இவ்விதம் தாழ்மைப்பட வேண்டியது தக்கதே—என்னையே நான் மறந்து கருமத்திற்குரிய கருவியைத் தேடாமற் போயினேன். நான் வசையுண்டது முற்றிலுந் தகுதியே, அதுவும் பிஸாரோவினால். (கண்ணீர்த்துளிகள் விழ) விழுங்கள், அபலைத் துளிகளே விழுந்துவிடுங்கள்; இதுவே இக்கண்கள் கலுழ்கின்ற நீர்த் துளிகளிற் கடைசி—ஒருபெண்ணின் காதல் எவ்வளவுதூரம் போகுமென்பது, பிஸாரோ, உனக்கு வெகு நன்றாய்த் தெரியுமன்றோ! —அவளது பகை செய்யக்கூடிய தெது என்பதையும் மிக விரைவில் உற உற அனுபவித் தறிவாய். ஆம்! கலங்கா நெஞ்சுடையாய்! மானிடரை மாழ்விக்கும் இடரெதுவும் வெருட்டாத் திட்பமுடையாய்! கற்பாறை யுருகி யொழுகும் எரிமலையின்வெவ்வாயில் கொடிநாட்டிய தீரனே! விண்ணளாவத் திரைகொதித்தெழும் புயற்கடல் நடுவில் மனவமைதியோடு நித்திரைகொண்டெழுந்த கம்பீரா! வா! வா! அச்சமற்ற ஆடவா! வா! உன்னுயிர்க்குக் காத்திருக்கும் இந்த மறலியைக் காணவும் பொறுக்கமாட்டாய்—ஓர் நங்கைக்குத் தீங்கிழைத்துவிட்டு, அவள் கோபாவேசத்திற்குக் கூடுமாயின் நீ தப்பிப்பிழை பார்ப்போம்.

[போகின்றான்.]

இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டுமாயின் உடனே வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து தபால் செலவு உள்பட விலை ரூ. 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக்கவும்.

மானேஜர்

தனிப்பாடல்கள்

[யாழ்ப்பாணம். திரு. க. சோமசுந்திரம் பிள்ளை.]

கந்தவேள்.

செழுமதி மிலைச்சிய செக்கர்ப் புன்சடைக்
கெழுமிய மூன்றுகட் கிளர்ம ணிக்கழுத்
தழுவையி னுரியுடை யொலிகொள் பூங்கழற்
றழனிமிர் மேனியான் தந்த மைந்தனே. 1.

மாயையி னுலகுயிர் வயிறு வாய்த்திடுஞ்
சாய்கையில் புணர்மூலைத் தளிர்கொள் சாயலாள்
ஆய்வுறு மருநெறி யாக்கு மம்பிகை
சேயென வுதித்திடு மிளைய செல்வனே. 2.

கண்ணுதல் தீயிடைக் கருவ தாகியே
விண்ணவ ரிருவர்தோள் மேவித் தாங்குறப்
புண்ணிய சரவணப் பொய்கை போயவன்
எண்ணிய வருவுரு வெடுத்த வெம்பிரான். 3.

ஆளுமீ னுகழுடை யெரிகொள் செய்யபூ
நாளுதிப் புனலெழில் நலங்கொள் வாயில்
நீளுதீ வினைபட நினைந்து நோற்றிடும்
ஆளுமீ னமுதமுண் டருளு மண்ணலே. 4.

முண்டக மலர்ந்த மூவிரண்டு சென்னியும்
எண்டகு கரங்களு மெழில்கொள் மார்பமும்
தண்டையுஞ் சிலம்புநின் றலம்பு தாள்களும்
கொண்டொரு முருகனாய் வந்த கொற்றவா. 5.

ஐங்கர நாலுவாய் முக்க ணார்மதந்
தங்கிய விருகவு ளொற்றைத் தந்தமுன்
பொங்கிய குடதயி லுடைய போதகஞ்
சங்கைகொள் தம்பியாய் முளைத்த தாணுவே. 6.

திருமரு வியமறுச் செய்ய மாமணி
மருமரு வியதுழாய் மழைகொள் மாமுகிற்
குருமரு வியநிறக் கோல மாயவன்
அருமரு வியதிரு மருக வையனே. 7.

பாசடைத் தாமரைப் பாயற் பண்ணவன்
தேசுடைச் செழுஞ்சுடர்ச் சிவனை யெள்ளியே
பேசிய வொருதலை பிடுங்கிக் காத்திடும்
மாசிலா வடுகனுக் கிளைய வள்ளலே. 8.

நிதிபதி வாழ்க்கையு நேரி லாப்பதத்
ததிபதி வாழ்க்கையு மடியன் வேண்டலன்
விதிபதி யன்பென வேண்டும் வீரனுட்
பொதிபதி யாய்முனம் போந்த புண்ணியா. 9.

சுந்தரக் கிம்புரிச் சூட்டுக் கோட்டுடை
மந்தர வெண்மலை மருவு மாயிரம்
பந்திகொள் நெடுவிழிப் பறக்கைக் குன்றெறி
இந்திரன் புந்தியி லினிக்கு மெந்தையே. 10.

தருவிளை யாடல்செய் சாத வாகனன்
செருவிளை யாடல்செய் தேவர் காணுறக்
கருவிளை யாடலைக் கடியும் எண்ணிலாத்
திருவிளை யாடலைச் செய்த செய்யனே. 11.

ஏங்கிய மாயவ னீரி ரண்டுகந்
தாங்கிய மலரவன் தேவர் தந்துயர்
நீங்கிய போயற நேர லார்ச்செறப்
பூங்கழற் றலைவனாய்ப் போந்த வேந்தலே. 12.

இருக்குணர் வேதிய னிதயத் தெண்ணிய
செருக்கற மறைமுதல் வினவித் தேர்கிலான்
உருக்கிளர் தலைநிரை யொடுங்கக் குட்டிய
திருக்கிளர் பூங்கரத் தெய்வ நாயக. 13.

தடைப்படு முணர்வுடைத் தாம ரைக்கணு
படைப்பென நீசெய்யும் பரிசு நன்றெனப்
புடைத்துயர் கந்தமா வனத்துப் போக்கியே
அடைத்தல கினைப்படைத் தருளு மண்ணலே 14

ஏறுடை முகத்தனை யிறைவ னேவிடச்
சீறியே நின்னையுஞ் சிறையிற் போக்குவன்
சேறிநீ விரைந்தெனச் செப்பிச் செம்மனம்
ஆறிய வீறுசே ராறு மாமுக. 15.

ஆருயி ரனைத்தையு மளித்துக் காத்திடும்
நீருல வியசடை நீல கண்டனார்
வாரமொ டுரைத்திட மலர வன்சிறை
தீருபு பணித்தருள் செய்ய சேவக! 16

நாமுத லென்றிடு மிருவர் நாணுற
தாமுத லாயமை தழலிற் காட்டிய
மாமுதல் வலச்செவி நிறைய மாமறை
யோமுத லருளிய வொப்பில் தேசிக! 17

காமுனி காட்சியன் மேலப் பூங்கழல்
தாமுனி வழிபடுஞ் சந்த னப்பொதி
மாமுனி வேண்டிட வண்டமி ழோடும்
ஓமுனின் றருளிய வுலக காவல. 18

கலக்கமி லியக்கருங் காவல் வீரரும்
அலக்கணுற் றடைந்திடு மமரர் யாவரும்
தலைக்கணத் தொகுதியுஞ் சாரச் சூர்ப்பகை
விலக்குபு சென்றிடும் வீர வீரனே. 19

செந்தியின் மேவியே தேசி கன்சொல
வந்தமி லவுணர்சீர் வினவி யன்புடைச்
சுந்தர மொய்ம்பனைச் சூரன் மாநகர்
சந்தினில் விடுத்தரு ளமரர் தம்பிரான். 20

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[270-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

வேறு.

130. அம்பொன்மாலை யார்களித்த
லத்தெழுந் தரத்தவாய்க்
கொம்பனார்கொ டுத்தமுத்த
நீரவாய கோழரைப்
பைம்பொன்வாழை செம்பொனே
பழுத்துவீழ்ந்த சோதியால்
வம்புபாய்ந்து வந்தொசிந்து
சாறுசார்வ மானுமே. 13.

அம்பொன் மாலையார்கள்-அழகிய பொன்மாலையை அணிந்தவர்களும், அரத்தம் வாய் - சிவந்த வாயை உடையவர்களும் ஆகிய, கொம்பு அனார் - பூங்கொம்பு போன்ற மாதர்கள், கொடுத்த - வார்த்த, முத்தம் - முத்துப்போல் தெளிந்த, நீர் ஆய - நீரை உடையவைகளாய, கோழ் அரை - கொழுத்த வழவழப்புள்ள சுற்றுப்புறத்தையுடைய, பைம்பொன் வாழை - பசும் பொன் வாழைமரங்கள், இதலத்து எழுந்து - இந்த இடத்தில் வளர்ந்து, செம்பொனே பழுத்து - செம்பொன்மயமான பழங்களே பழுத்து, வீழ்ந்த - சொரிந்த, சோதியால் - ஒளியினால், வம்பு - வாசனையுடன், பாய்ந்து - பாய்ந்து, ஒசிந்து - நலிந்து, சாறு-அக்கனிகளின் சாறானது, வந்து - வந்து, சார்வ - பூமியைச் சார்வதை, மானும் - ஒக்கும்.

மாதர்கள் நீர்வார்த்து வளர்த்த வாழைக்கனியினின்று பரவிய ஒளி, அதனின்று சாறு பாய்வதை ஒக்கும் என்பது கருத்து. வந்து, என்பதற்குக் காற்று, என்னும் பொருளும் இருத்தலால், வந்து ஒசிந்து, என்பதற்குக் காற்றிற்கு நலிந்து எனவும் பொருள் கொள்ளலாம்.

131. வேய்நிழன் னிலாவிலங்கு
வெள்ளிவிம்மு பாளைவாய்ப்
பாய்நிழற் பசுங்கதிர்ப்
பரூஉமணிக் குலைகுலாய்ச்
சேய்நிழற் செழும்பொனாற்
றிரண்டசெம் பழத்ததாய்ப்
போய்நிழற் பொலிந்துவீழ்வ
போன்றபூக ராசியே. 14.

பூகம் ராசி - பாக்குமரங்களின் வரிசைகள்—வேய் - மேலே கதுவியிருக்கின்ற, நிழல் - ஒளியினால், நிலா இலங்கு - சந்திரனைப்போல் பிரகாசிக்கின்ற, வெள்ளி - வெள்ளிமயமான, விம்மு - பருத்த, பாளைவாய் - பாளையில், பாய் - பாய்கின்ற, நிழல் - ஒளியுடைய, பசும் கதிர் - பசுமையான கதிர்களையுடைய, பரூஉ - பருத்த, மணி - மரகதம்போன்ற, குலை - குலைகள், குலாய் - விளங்குவதும், சேய் - தூரத்தில், நிழல் - ஒளிவீசுகின்ற, செழும் பொனால் - செழுமையான பொன்னால், திரண்ட - முதிர்ந்த, செம் பழத்தது ஆய் - சிவந்த பழங்களை உடையதும் ஆகி, நிழல் - தன் சாயையைத் தரையில் எறிகின்ற தோற்றமானது, போய் - போய், பொலிந்து - பொலிவுடன், வீழ்வ போன்ற-(அம்மரங்களே தரையில்)சாய்வதைப்போன்றிருந்தன.

பாக்குமரங்களின் சாயை தரையில் படிவதானது அப் பாக்குமரங்களே சாய்வது போன்றிருந்தது என்பது கருத்து.

132. காந்திநின்ற கற்பக
நிழற்கலந்து கையறப்
பாய்ந்தெரிந்த போல்விரிந்து
பாரிசாத மேர்செய
வாய்ந்தெரிந்த செம்பொன்மாட
வாயிலாறு கண்கொளப்
போந்தெரிந்த போன்மரம்
புறம்பொலிந் திலங்குமே. 15.

காந்தி நின்ற - ஒளிதங்கிய, கற்பகம் நிழல் கலந்து-கற்பகத்தின் நிழல் கலந்து, கைஅற - ஓர் ஒழுங்கின்றி எங்குமாய், பாய்ந்து எரிந்தபோல் - பாய்ந்து எரிந்தனபோல், பாரிசாதம் - பாரிசாத மரங்கள், ஏர் செய - அழகு செய்யவும், வாய்ந்து - பொருந்தி, எரிந்த - புடமிட்டு மாசுநீங்கிய, செம்பொன் - சிவந்த பொன்னாலாகிய, மாடம் வாயில் - கோபுரவாயில்களையுடைய, ஆறு - வழிகளெல்லாம், கண்கொள - பார்ப்போர் கண்களைக் கதுவிக்கொள்ளும்படி, போந்து - போய், எரிந்தபோல் - எரிந்தனபோல், மரம் - எரிமரங்கள், புறம் பொலிந்து - வெளியிலே விளங்கி, இலங்கும் - பிரகாசிக்கும்.

எரிமரம், என்பது இரவிலே ஒளிமயமாய்த் தோன்றும் ஒருவகை மரம் (Phosphorescent plant). வழிகளில் இவை ஒளிர்ந்து நிற்பதால், அவ்வழிகளே தீப்பற்றி எரிவனபோல் தோன்றினவாம்.

133. மாசில்கண்ணி மைந்தரோடு
மங்கைமார் திளைத்தலிற்
பூசுசாந் தழித்திழிந்த
புள்ளிவேர் புலர்த்தலால்
வாசமுண்ட மாருதந்தென்
வண்டுபாட மாடவாய்
வீசுவெள்ளி லோத்திரப்
பொதும்பர்பாய்ந்து விம்முமே. 16.

மாசு இல்-குற்றம் அற்ற, கண்ணி - பூமாலையணிந்த, மைந்தரோடு - ஆடவர்களோடு, மங்கைமார் - மாதர்கள், திளைத்தலில் - கூடிமகிழ்வதால், பூசு - பூசிய, சாந்தம் - சந்தனத்தை, அழித்து இழிந்த - அழித்து வழிந்த, புள்ளி - புள்ளி புள்ளியாய் அரும்பும், வேர்-வியர்வையை, புலர்த்தலால் - உலர்த்தியதால், வாசம் உண்ட - அந்த வாசனையைச் சேர்ந்த, மாருதம் - காற்றானது, தென் - இசையையுடைய, வண்டு-வண்டுகள், பாட - பாடப்பெற்று, மாடம்வாய் - மாடங்களில், வீசு - ஒளிவீசுகின்ற, வெள்ளி-வெண்மையான,

லோத்திரம் பொதும்பர் - லோத்திரச் சோலையில், பாய்ந்து - பாய்ந்து, விம்மும் - மிகுவதாகும்.

மாருதம் - வேர்புலர்த்தலால் -பொதும்பர் பாய்ந்து, விம்மும், எனக் கூட்டிக்கொள்க. லோத்திரம் என்பது ஒருவகை மரம்.

134. ஆர்ந்துணர்த் தமாலமும்
மசோகபல் லவங்களுந்
தாந்துணர்த் தசைந்தன
தழைத்தலைத் தடாயின
மாந்துணர்ப் பொதும்பர்வந்து
வைகமற்ற தூன்றலாற்
றேந்துணர் சுமந்தொசிந்
தசைந்த தேவதாரமே. 17.

ஆம் துணர் - பூங்கொத்துக்கள் உடையதாகிய, தமாலமும் - தமாலம் என்னும் மரங்களும், அசோகம் பல்லவங்களும் - அசோகத் தளிர்களும், தாம் - ஆகிய அவை, துணர்த்து - கொத்துகொத்தாகப் பூத்து, அசைந்தன - ஆடின. தழைத்தலை - இலைகளுக்கு இடையே, தடாயின - அளாவிய, மாந்துணர்-மாமரங்களின் பூங்கொத்துக்கள், தேவதாரம் - தேவதார மரங்களின், பொதும்பர் - பொந்துகளில், வந்து வைக - வந்துபுகுந்து தங்க, (மற்று - அசை) அது ஊன்றலால் - அந்த மாங்கொத்துக்கள் அழுத்துவதால், தேன்துணர் - தேனொழுகும் பூங்கொத்துக்களை, சுமந்து - சுமந்து, ஒசிந்து - துவண்டு, அசைந்த - அந்தத் தேவதாரமரங்கள் ஆடின.

தமாலமும் அசோகமும் தம்முடைய பூங்கொத்துக்களின் பாரந் தாங்கமாட்டாமல் ஆடின. தேவதாரமானது, தன் பூங்கொத்தின் பாரத்தோடு மாங்கொத்தும் அதன் பொந்தில் தங்கி அழுத்தலால் பின்னும் அதிகமாக நலிந்தது—என்பது இச்செய்யுளின் கருத்து.

135. தெய்வயாறு காந்தளஞ்
சிலம்புதேங்கொள் பூம்பொழிற்
பௌவமுத்த வார்மணற்
பறம்புமௌவன் மண்டப
மெவ்வமாடு மின்னபோ
லிடங்களின்ப மாக்கலாற்
கவ்வையாவ தந்நகர்க்கு
மாரனார்செய் கவ்வையே. 18.

காந்தள் அம் சிலம்பு - காந்தள்மலர் அலர்ந்திருக்கின்ற அழகிய மலை, தேன்கொள்பூம் பொழில் -தேன் நிறைந்த பூஞ்சோலை, பௌவம் முத்தம் வார்மணல் பறம்பு - கடலிலுள்ள முத்தைப்போன்ற மிகுந்த மணலால் ஆகிய குன்றுகள், மௌவல் மண்டபம் - மல்லிகைக் கொடிகள் படர்ந்த மண்டபங்கள்,எவ்வம் ஆடும் இன்னபோல் இடங்கள் - தனிமை வாய்ந்த இவைகளைப்போன்ற இடங்களை, தெய்வயாறு - அங்குப் பாய்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய ஆறானது, இன்பம் ஆக்கலால் - இன்பமாகச் செய்தலால், அ நகர்க்கு- இரதநூபுரம் என்னும் அந்த நகரத்தில், கவ்வை ஆவது - துன்பம் எனப்படுவது, மாரனார் - மன்மதன், செய்-செய்கின்ற, கவ்வையே - துன்பமே ஒழிய வேறில்லை.

காமநோயல்லது அங்கு வேறெவ்வித நோயுமில்லை என்னுமிது ஒழித்துக்காட்டணி.

136. மற்றமா நகர்க்குவேந்தன்
மானயானை மன்னர்கோ
னற்றமின்றி நின்றசீ
ரழற்பெயர்ப் புணர்ச்சியான்
முற்றுமுன் சடிப்பெயர்சொன்
மூன்றுலகுங் மான்றெழப்
பெற்றுநின்ற பெற்றியான்
பீடியாவர் பேசுவார். 19.

(மற்று - அசை) அ மா நகர்க்கு - அந்தப் பெரிய நகரத்திற்கு, வேந்தன் - அரசன்,மான யானை- பெரிய யானைகளையுடைய, மன்னர்கோன் - இராஜாதிராஜன். அற்றம் இன்றி நின்ற - அழிவு இல்லாமல் நின்ற, சீர்-சிறப்பை உடைய, அழல் பெயர் புணர்ச்சியான் - ஜ்வலநன் என்னும் அக்கினியின் பெயரோடு சேர்ந்தவன்,முற்றும்முன்-ஜ்வலநன் என்னும்அப்பெயர் முடிவதன் முன், சடி பெயர்சொல் - ஜடிஎன்னும் பெயர் சொல்லப்படுபவன். மூன்று உலகும் - மூன்று உலகங்களும், ஆன்று எழ - நிறைந்து சிறக்கும்படி, பெற்று நின்ற - பெற்று நின்ற, பெற்றியான் - தன்மையை உடைபவன், பீடு - இவனது பெருமையை, யாவர் பேசுவார் - யாரால் உரைக்கமுடியும்.

இரதநூபுரத்து அரசன் பெயர், ஜ்வலநஜடி என்பது. ஜ்வலநன், என்பது அக்கினியின் பெயர்களில் ஒன்று. ஆகையால் 'அழல் பெயர்ப் புணர்ச்சியான்' என்றார். ஆனால் அதன் பின் 'ஜடி' என்ற சொல் வர வேண்டும். ஆதலின், 'முற்றுமுன் சடிப்பெயர்சொல்' என்றார். 'ஜ்வலநஜடி' என்பது மன்னனுடைய பெயர் என்றுரைப்பதற்கு இத்தனை பாடு.

137. இங்கண்ஞால மெல்லைசென்
றிலங்குவெண் குடைநிழல்
வெங்கண்யானை வேந்திறைஞ்ச
வென்றியின் விளங்கினான்
கொங்குகொண்டு வண்டறைந்து
குங்குமக் குழம்பளா
யங்கராக மங்கணிந்
தலர்ந்தவார மார்பினான். 20.

இங்கண் ஞாலம்-இந்தப் பூமியின்,எல்லை சென்று - எல்லையளவு பரவி, இலங்கு - விளங்குகின்ற, வெள் குடை நிழல் - வெண்மையான அவனது குடையின் நிழலில், வெங்கண் யானை - கொடுமைவாய்ந்த யானைகளை உடைய, வேந்து இறைஞ்ச - அரசர்கள் வந்து வணங்கும்படி, வென்றியின் விளங்கினான் - வெற்றியோடு விளங்கினான். கொங்கு - தேனை, கொண்டு - உண்டு, வண்டு-வண்டுகள், அறைந்து-ஒலித்து, குங்குமம் குழம்பு அளாய்-குங்குமக்குழம்பைப்பூசி, அங்கராகம் - வாசனைப் பொடிகளை, அங்கு - அவ்விடத்தில், அணிந்து - அணிந்து, அலர்ந்த-மலர்ந்த, ஆரம் - மாலையை அணிந்த, மார்பினான் - மார்பை யுடையவன்.

இக்கண், என்பதன் மெலித்தல் விகாரம் இங்கண். இச் சொல்லை இப்படி விகாரப்படுத்தி இழுத்துவைத்திருப்பது எதுகையின்பொருட்டு; வேறெதற்கும் அது வீண்.

138. விச்சையாய முற்றினன்
விஞ்சையார்க ளஞ்சநின்
றிச்சையாய வெய்தின
னேந்துசெம்பொ னீண்முடிக்
கச்சையானை மானவேற்
கண்ணிலங்கு தாரினன்
வெச்செனச்சொ லொன்றமே
விடுத்துமெய்ம்மை மேயினன். 21.

விச்சை ஆய முற்றினன்-வித்தைகள்எல்லாவற்றையும் முற்றக் கற்றவன், விஞ்சையர்கள் - வித்தியாதரர்கள், அஞ்ச நின்று - பயந்து நிற்க, இச்சை ஆய எய்தினன் - தான் விரும்பினவைகளை எல்லாம் அடைந்தவன். ஏந்து சொம்பொன் நீள் முடி - நிமிர்ந்த செம்பொன்னுலாகிய பெரிய கிரீடத்தையும், கச்சை யானை- கயிறுகட்டிய யானையையும், மானவேல்- அச்சத்தைத் தருகின்றவேலாயுதத்தையும், கண் இலங்கு தாரினன்- பெருமை விளங்குகின்ற படையையும் உடையவன். வெச்சென-கடுமையான, சொல் ஒன்றுமே விடுத்து - சொல் ஒன்றை விடுத்து, மெய்ம்மை மேயினன்- வாய்மையுடையவன்.

இந்தப் பீடைத்தான் 'யார் பேசுவார்' என்று கவி சற்றுமுன் ஆகாதகாரியமாக அதிசயித்துநின்றது.

குறிப்பு:—இந்தச் சருக்கத்தில் இதுவரையில் வந்த செய்யுள்கள் வெறும் வார்த்தைகளே. இவைகளின் அருமையெல்லாம் பொருள்செய்வதிலேயே கிடக்கின்றதே யல்லாது, கருத்தளவில் யாதுமில்லை எனவேண்டி யிருக்கின்றது. மோனைக்கும் எதுகைக்கும் மிகமுயன்று, பொருளும் முடிவும் சேருமோ சேராதோ, சிலவார்த்தைகளைத் தொடுத்து இரதநூபுரத்தை வர்ணித்துவிட்டார் கவி. உரைக்க வரும் ஒன்றினை வர்ணிக்கவேண்டுமே எனத் தன்கடமையைக் கழித்தாற்போல் இப்பாடல்கள் அமைந்திருக்கின்றனவே யன்றிக் கருத்துமுற்றத் தோய்ந்த உவகையால் எழுந்த பாசுரங்கள் இவையெனத் தோன்றவில்லை. சுவையில்லா அடைமொழிகளுக்கு உதாரணந் தேடுவார் இப்பாசுரங்களிற் பார்க்கலாம்.

யாப்பிலக்கணம்

அடி.

[272-வது பக்கத் தொடர்ச்சி]

குறையுமிகையுமின்றிச் செய்யுளடிகள் செல்வதற்கு நான்கு சீர்கள் இருத்தலே நேரான அளவு எனக் கவிநயம் உணர்ந்தோர் கருதினர் ஆதலின் பெரும்பான்மை செய்யுள்களெல்லாம் நாற்சீரடிகளால் அமைவதும், நாற்சீரடிக்கு, அளவடி அல்லது நேரடி என்னும் பெயர் பொருந்துவதுங் கண்டோம். நாற்சீரின் நீண்ட ஐஞ்சீரடியை நெடிலடி என்றனர். இனி, ஐந்து சீரிற்கும் அதிகமானால், அவ்வடிகளுக்குக் கழிநெடிலடியெனத் தொகுத்துப் பெயர் கூறினர்.

இக் கழிநெடிலடிகளில், 6 சீர் முதல் 16 சீர்கள் வரையில் இருக்கலாம். அவ்வாறு அமைந்த சில பாசுரங்களைக் காண்போம்:—

1. அறு சீர்க் கழிநெடிலடி:—

(1) நல்வினை யுடைய நீரார்
நஞ்சுணி னமுத மாகும்
(2) இல்லையே லமுது நஞ்சாம்
இன்னதால் வினைவின் ஆக்கம்
(3) கொல்வல்யா னிவனை யென்றும்
இவன்கொல்லும் என்னை யென்றும்
(4) அல்லன நினைத்தல் செல்லார்
அறிவினாற் பெரிய நீரார்.

[நல்வினைப்பயன் உடையவர் விஷத்தை உண்டாலும் அது அவர்களுக்கு அமிர்தம் ஆகும். அந்நல்வினைப்பயன் இல்லையானால், அமிர்தமும் அவர்களுக்கு விஷமாய் முடியும். இருவினைகளின் பயன் இப்படி இருத்தலால், அறிவுடைய பெரியோர், 'யான் இன்னொருவனைக் கெடுத்தழிப்பேன்' என்று முனையவாகிலும், மற்றொருவன் தன்னைக் கெடுத்தழிக்க இயலும் என்றாகிலும் வீணாக நினைக்கமாட்டார்]

இது ஒரு ஆசிரிய விருத்தம். நான்கு அடிகளையுடையது. அடிதோறும் ஆறுசீர்கள் இருக்கின்றன. ஆதலால் இப்பாட்டை 'அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்' என வழங்குவர். இதன் பொருள் தெரியாததால் பலர் உச்சரிக்க இயலாமல் இடர்ப்படுவதுண்டு.

(2) எழுசீர்க் கழிநெடிலடி.

(1) பூதங்க ளல்ல பொறியல்ல வேறு
புலனல்ல வுள்ள மாதியின்
(2) பேதங்க ளல்ல விவையன்றி நின்ற
பிறிதல்ல வென்ற பெருநூல்
(3) வேதங் கிடந்து தடுமாறும் வஞ்ச
வெளியென்ப கூடன் மறுகிற்
(4) பாதங்க ளோவ வளையிந்த ருதி
பகர்வாரை யாயு மவரே.

[மதுரைமாநகரின் தெருக்களில், தம் திருவடிகள் வருந்தும்படி, வளையல் விறகு மாணிக்கம் குதிரை முதலியவைகளை விற்றருளிய கடவுளின் தன்மையை ஆராய்ந்தறிய முயல்பவர்—பஞ்சபூதங்களும் அல்ல, இந்திரியங்களல்ல, புலன்களல்ல, மனம் முதலியவைகளின் பேதங்களும் அல்ல, இவைகளல்லாது வேறாய் நிற்கின்ற ஆன்மாவுமன்று,என்று கூறுகின்ற பெரிய வேதங்களும் உண்மையையுணரமாட்டாமல் தடுமாறும்படி புரிகின்ற வஞ்சனையுடைய வெறும் வெளியே என்பர்.]

எழுசீர்க் கழிநெடிலடி.

(1) விடுமி னெங்கடுகில் விடுமி னென்றுமுனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
(2) பிடிமினென்ற பொருள்விளைய நின்றருள்செய்
பெடைந லீர்கள்கடை திறமினோ.

[ஊடிய மாதர் தம் கணவர் உள்வராதபடி கதவிட்டிருக்க, அதனைத் திறக்கும்படி கவி, வாயில்வேண்டிப் பாடிய கலிங்கத்துப்பரணிப் பாட்டு இது. இதன் பொருள்—தலைக்கொண்ட காமத்தால் தம் துகிலைப்பற்றி யிழுக்குநாயகனை, "விடு, என் துகிலை விடு' என்று மிகுந்த வெகுளியோடு மொழிவதுபோல் எழுகின்ற உங்கள் மெல்லிய குதலைச் சொற்களால், "எம் துகிலினைப் பற்றிக்கொள்ளுங்கள்" என்ற பொருளே தோன்றும்படி நின்று உங்கள் நாயகர்களுக்கு அருள்செய்கின்ற, அன்னப்பெடை போன்ற மாதர்களே—கதவைத் திறவுங்கள்]

இந்தச் செய்யுளில் இரண்டு அடிகளே இருக்கின்றன. ஒவ்வொரு அடியும் ஏழு சீர்கள் உடைய கழிநெடிலடி. 6, 7, 8 சீர்களுடைய அடிகளைச் சிறப்புடைக் கழிநெடிலடி என்னலாம்.

(3) அவசமுற் றுளநெகத் துயினெகப் பவளவா
யணிசிவப் பறவிழிக் கடைசிவப் புறநிறைக்
கவசமற் றிளநகைக் களிவரக் களிவருங்
கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினோ.

இனி, ஒன்பது அல்லது பத்துச் சீர்கள்உள்ள அடிகளை, 'இடையாகு கழிநெடிலடி' என்பர்.

(4) ஒன்பான்சீர் இடையாகு கழிநெடிலடி:—

அறிவா ரறியு மன்ப டைந்தின்ப மாமருளே
பூண்டு மாண்ட செல்வ வாண்டகையார்
மறிவார் மறியு மனத்தான் மாசே யெனப்பூண்டே
யென்று மருளார் செல்வ மருளாராய்ப்
புரிவா ரென்னிற் றுன்பம் புரிவார் போலுங்கீழ்
கீழென்று பொருளே சிந்தித் திருணீங்கப்
பிறியார் பேரு நெறியே பிழையார் நின்றுபிறப்பங்
குணர வல்லா ரென்றும் வல்லாரே.

(5) பதின்சீர் இடையாகு கழிநெடிலடி:— -

i. ஒருது றைப்புனல் சினப்புலியு மானு முடனே
யுண்ண வைத்தவுரவோனுலகில் வைத்தவருளும்
ii. பொருதுறைத்தலை புகுந்துமுசு குந்தனிமையோர்
புரம டங்கலு மரண்செய்து புரந்த புகழும்.

பத்துச்சீர்களுக்கு மேற்பட்டவைகளெல்லாம் கடையாகு கழிநெடிலடிகள். அவைகளிற் சிலவற்றை மாத்திரம் இங்கு உதாரணமாய்க் கண்டால்போதும்.

(6) பன்னிருசீர்க் கடையாகு கழிநெடிலடி:—

i உண்டகில கோடியு மமிழ்ந்திடுவன் முகிலேழு
மொக்கப் பிழிந்து கடலே
ழுடன்வாய் மடுத்திடுவன் வடமேரு மூலத்
தொடும்பிடுங் கிச்சுழற்றி
ii அண்டபகி ரண்டமு மடித்துடைப் பன்புவன
மவையேழு பிலமேழுமா
யடைவடை வடுக்கியவடுக்கைக்குலைப்பனிவை
யத்தனையும் வித்தையலவாங்
iii கொண்டன்மணி வண்ணனும் முண்டகக்கண்
குஞ்சிதச் செஞ்சரணமும் [ணனுங்
குடிலகோ டீரமுந் தேடியத லமுமண்ட
கோளமுந் துருவியோடப்
iv பண்டைமறை யோலமிட வெளியினட மாடும்
பரஞ்சுடர்ப் பொலிந்தகாசிப்
பதியிலிடையாமலிப்பல்லுயிர்த்தொகுதியும்
பரமபத மடைவிப்பனே.

இது அடிதோறும் பன்னிரண்டு சீர்களுடைய கடையாகு கழிநெடிலடி நான்கு கொண்ட ஆசிரிய விருத்தம்.

(7) பதினன்குசீர்க் கடையாகு கழிநெடிலடி.

(1) மறவர் கொம்பை வினவ வந்த
இறைவர் தூத கேளடா
வடம லைக்கு ணின்று மாயர்
தடம லர்க்க ணருளினால்
(2) விறல்பொ ருந்து மெங்கள் கொம்பு
வீறு முங்க ளானையின்
வெண்மை பெற்ற கொம்பு போல
விற்ப தோவ ரைந்திங்
(3) திறன டைந்த கொம்பு போல
விதியி னெவ்வி னத்தையுஞ்
சேரு மோசு வர்க்க லோக
தாரு விட்ட கொம்பு போ
(4) லறமி குந்த சுரர்தொ டப்பொ
றுக்கு மோசொ லரசர்பா
லான கொம்பு தண்டி கைக்க
மைந்த கொம்பு சரதமே.

(8) பதினறுசீர்க் கடையாகு கழிநெடிலடி.

(1) அலகில் வெற்றியு முரிமையு மிவையென
வவய வத்தினி லெழுதிய வறிகுறி
யவையெ னப்பல வடுநிரை யுடையவ
ரடிபி றக்கிடி லமரர்த முலகொடிவ்
(2) வுலகு கைப்படு மெனினும தொழிபவ
ருடலெ மக்கொரு சுமையென முனிபவ
ருயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்
ஒருவ ரொப்பவர் படைஞர்கண்மிடையவே.

[அளவற்ற வெற்றியும் உரிமையும் இவையெனத் தம் அவயவங்களில்எழுதிய அறிகுறிகளென்னப் புண்வடுக்கள் பல உடையவர். முன்வைத்தகாலைப் பின்வைத்தால் தேவலோகத்தோடு இந்த வுலகமும் வருவதாயினும் பின்வாங்க இசையாதவர். இந்த உடலேதமக்கு ஒருசுமையென வெறுப்பவர். போர்க்களத்தில் தம் உயிரை விற்று மிகுந்த புகழை வாங்குவதற்குஆவலுடையவர். இப்படியே ஒருவரைப்போல் பல படைவீரர்கள் நெருங்க......].

188913

இந்தப் பாட்டுப் பதினறு சீர்களுடைய அடிகள் இரண்டினால் ஆயது.

பாக்களில், வஞ்சிப்பா இரண்டுசீர்கள் உள்ள குறளடிகளாலேனும் மூன்றுசீர்கள் உள்ளசிந்தடிகளாலேனும் ஆகலாம். மற்ற ஆசிரியப்பா வெண்பா கலிப்பா என்னும் மூன்று பாக்களும் நான்கு சீர்களுள்ள அளவடிகளாலேயே ஆகும். ஐந்து சீருடைய நெடிலடிகளால் அமைவது பெரும்பாலும், கலிநிலைத்துறை, கட்டளைக் கலித்துறை என்னுஞ் செய்யுள்கள். ஆறு சீரும் அதற்குமேற்பட்ட சீர்களும் உடைய அடிகள் பயில்வது ஆசிரியவிருத்தம். 16 சீர்களுக்குமேல் போவதில்லை என்றாலும் இன்னும் அதிகமான சீர்களைக் கொண்ட அடிகளால் அமைகின்ற செய்யுள்களும் உள. அடி யொன்றிற்கு நாற்பத்தெட்டுச் சீர்களுடைய நான்கு அடிகளால் அமைந்த செய்யுளொன்று உதாரணமாய் இதன் கீழ்க் காட்டப்பெற்றிருக்கின்றது.

1. நருகதிர் வழங்கு தகடுபடு செம்பொ
னவமணி குயின்ற
தொடியணி யணிந்து ககனவி லிடுநீல
வெற்பொத் திருந்தன
நறியபுது மன்ற றிசைமுழுது மண்ட
நறவுகுதி கொண்ட
துளவணி யலங்கன் மதுகர மொருகோடி
சுற்றப் புனைந்தன

நளினமட மங்கை குவலய மடந்தை
சனகன தணங்கு
பொதுவர்மக ளென்றிவ் வனிதையர் தனபார
மொத்தக் குழைந்தன
நதிபதி சுழன்று கதறி நுரைசிந்த
வரவக டுரிஞ்சி
யலறவல மந்து வடவரை யுடறேய
நட்டுக் கடைந்தன,
(இதுவரையில் முதலடி)

2. இகலி யிருகுன்றி லிருசுட ரெழுந்து
பொருவதென விம்ப
மதிமுக மிலங்கு மிருகுழை யிருபா
டலைப்பச் சிறந்தன
இணையற நிமிர்ந்து வலியொடு திரண்டு
புகழொடு பரந்து
புழுகொடு மளைந்து கலவையி னணிசேறு
துற்றுக் கமழ்ந்தன
எதிரொருவ ரின்றி யகில வுலகுந்த
னடிதொழ விருந்த
விரணியன் மடங்க முரணிய வரைமார்ப
மொற்றிப் பிளந்தன
எறிகடல் கலங்கி முறையிட வெகுண்டு
நிசிசர ரிலங்கை
யரசொடு மலங்க வொருசிலை யிருகால்
வளைத்துச் சிவந்தன
(இது முழுவதும் இரண்டாவது அடி)

3. மிருகளவி னின்ற விளவுகனி சிந்தி
மடியவிடு கன்று
குணிலென வெறிந்து பறவையி னகல்வாய்
கிழித்துப் பகிர்ந்தன
வெறிபடு குருந்தை முறிபட வடர்ந்து
குடநட மகிழ்ந்து
குரவைகள் பிணைந்து பொருதொழி லெருதேழு
செற்றுத் தணிந்தன
வெடிபட முழங்கி யெழுமுகிலு மண்ட
ரொடுநிரை தியங்க
வெறிதிவலை கண்டு தடவரை குடையா
வெடுத்துச் சுமந்தன
விழிவடவை பொங்க வெதிர்பொர நடந்த
களிறுளம் வெகுண்டு
பிளிறிட முனிந்து புகர்முக விருகோடு
பற்றிப் பிடுங்கின
(இது முழுதும் மூன்றாவது அடி)

4. அகலிடமு மும்ப ருலகமு நடுங்கி
யபயமடி யெங்க
ளபயமென வந்து விழுதொறு மிடையூ
றகற்றிப் புரந்தன
அருகுற விளங்கு மெறிதிகிரி சங்கம்
வெயிலொரு மருங்கு
நிலவொரு மருங்கு மெதிரெதிர் கதிர்வீச
விட்டுப் பொலிந்தன
அருமறை துணிந்த பொருள்முடிவை யின்சொ
லமுதொழுகு கின்ற
தமிழினில் விளம்பி யருளிய சடகோபர்
சொற்பெற் றுயர்ந்தன
அரவணை விரும்பி யறிதுயி லமர்ந்த
வணிதிரு வரங்கர்
மணிதிகழ் முகுந்த ரழகிய மணவாளர்
கொற்றப் புயங்களே.—(இது முழுவதும்
நான்காமடி)

இது பிள்ளைபெருமாள் ஐயங்கார் பாடிய திருவரங்கக் கலம்பகத்திலுள்ள செய்யுள்களிலொன்று. பிரபந்தத்தலைவனாகிய ஸ்ரீரங்கநாதரது புயங்களைப் பலபடியாக வருணித்துப் பாடியது இப்பாடல்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[275-வது பக்கத் தொடர்ச்சி]

அவலச் சுவைக்கு மவதி யுளது.

கம்பராமாயணத்தில் கைகேசியின் சூழ்வினை கைவந்தவாறு இவ்வாறு. வனவாசத்தைத் தன் அன்னையின் வாயினின்று இராமன் வாங்கிக்கொண்ட விதம் முதனூலினின்று இங்கு முற்றிலும் மாறித் தோன்றலால், அதனையும் அயல்வைத்து, மாற்றிய கம்பர்தம் கலைத்திறம் எத்தகைத்து எனக் காண்பது சுவைமிகு விருந்தொன்றாகும். இதன்கீழ் வால்மீகி இராமாயணத்தின் இப்பாகத் தமிழ்மொழிபெயர்ப்பு எடுத்தெழுதப் பெற்றிருக்கின்றது:—

"விலையுயர்ந்த ஒரு ஆசனத்தில் கைகேயியுடன் இருந்த தமது தந்தையாரது முகம் வெகு பரிதாபமான நிலைமையில் இருப்பதை இராமர் கண்டார். அவர், தமது தந்தையாரது சரணாரவிந்தங்களில் வெகுவணக்கத்துடன் முதலில் நமஸ்காரம் பண்ணி அதன் பிறகு வெகு மரியாதையுடன் கைகேயின் பாதங்களில் வந்தனஞ் செய்தார். இவரைக் கண்டவுடன் எளிய தசரதர், "ஏ ராம!" என்று சொல்லி நீர் நிரம்பிய கண்களையுடையவராய் இவரைப் பார்த்தற்கும் பேசுதற்கும் வல்லவராகவில்லை. ஒரு நாளிலும் அவ்வாறு இராத தமது தந்தையார் அன்று அவ்வாறு இருந்ததையும், மனத்தில் பயத்தை உண்டாக்கும் அவருடைய உருவத்தையும் கண்டு இராமர், காலினால் ஒரு சர்ப்பத்தை மிதித்தவர்போல் நடுங்கிவிட்டார். மிக்க துன்பமடைந்த இந்திரியங்களினால் அதிகமாய்ப் பொங்குந் துக்கத்தீயால் வாடியும், அடிக்கடி பெருமூச்சு எறிந்துகொண்டும், நொந்து குழம்பிய மனத்துடன் கூடியுமிருந்த தந்தையாரான தசரதமகாராஜர், கலங்குந்தன்மை யற்றிருந்தும் கலக்கமடைந்த கடல்போலவும், இராகுவாற் பிடிக்கப்பட்ட சூரியன் போலவும், பொய்மைச் சொல்லிவிட்டு மனங் கலங்கிநிற்கும் மாமுனிவர் போலவும் இராமருக்குத் தோன்றினார். இராமர், காரணந் தோன்றாத தசரதருடைய சோகத்தை நினைத்து, பருவகாலத்திற் கடல் பொங்குவது போல் துக்கத்தால் மிகப்பொங்கினார். அன்றியும், இராமர், எப்பொழுதும் தமது தந்தையாருடைய க்ஷேமத்தையே விரும்பியவராகையால், தமக்குள்ளேயே 'என் தந்தை இன்றைக்கு என்னைப்பார்த்து ஏன் ஆனந்திக்கவில்லை? என்னைக் காணாதபொழுது கோபித்துக் கொண்டிருந்தபோதிலும் என்னைக் கண்டவுடன் தமது கோபத்தை மறந்து புன்னகையோடு அன்பாக இருப்பரே! அப்படிப்பட்ட

இவருக்கு இன்றைக்கு என்னைக் கண்டவுடன் வருத்தம் வரவேண்டிய காரணம் என்ன?" என்று எண்ணினார். இராமர் பின்பு ஏழைபோற் சோகத்தால் வருந்தி முகத்தின் ஒளி குறையப்பெற்று கைகேயியை நமஸ்காரம் பண்ணி, அவளைப் பார்த்து, "அறியாமையாலேனும் நான் எனது தந்தைக்குக் குற்றம் பண்ணினதில்லையே! ஏன் என் தந்தை கோபித்துக்கொண்டிருக்கிறார்? அதைச் சொல்லும்; அவரைச் சமாதானப்படுத்தும். எப்பொழுதும் என்னைக் கண்டால் ஆசையுடன் இருப்பவர், இப்போது ஏன் இவ்வாறு மனக்கலக்கமுடையவராய் இருக்கின்றார்? இவர், என்னைக் கண்டும் முகம் வாடிப் பரிதபித்துக்கொண்டு ஏன் பேசாமல் இருக்கிறார்? இவர் தேகத்தை நோய் வருத்துகின்றதா? இவர்க்கு மனவருத்தம் உண்டாக ஏதேனுங் காரணம் உண்டா? சுகமென்பது எப்பொழுதும் ஒருவனுக்கு ஒரேவண்ணமாய்இருந்துகொண்டிருக்குமென்பது வெகு அருமை. அழகிய தோற்றத்தையுடைய பரதன், மிக்க வலியுள்ள சத்துருக்கனன், என்னுடைய தாய்மார்கள் ஆகிய இவர்கள் குறைவின்றி இருக்கின்றனரா? என் தந்தையாரின் மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்காமலும், அவருடைய சொற்படி நடவாமலும், அவர் என்மேற் கோபிக்கவும் நான் ஒரு இமைப்பொழுதும் பிழைத்திருக்க மாட்டேன். தன் கண்ணுக்குப் புலனாகுந் தனது தோற்றத்திற்குக் காரணமா யிருக்குந் தந்தைக்கு விரோதமாக எவனாயினும் நடப்பானோ? அல்லது, அம்மா, நீர் கோபத்தினாலாவது செல்வாக்கினாலாவது பிதாவைப்பார்த்துக்கடிந்து பேசினபடியால் அவர் மனம் இவ்வாறு குழப்பம் அடைந்திருக்கின்றதா? யாது காரணம்? தெரியவில்லையே! இந்தப் பூபாலருடையமனமானது இவ்வாறு இதுவரையுமின்றி இன்றைத்தினம் ஏன் குழம்பி நிற்கின்றது? இதை உண்மையாகச் சொல்லும்" என்று வினவினார். மகாத்துமாவாகிய இராமர் இவ்வண்ணங் கேட்க, கைகேயி, சற்றேனும் வெட்கமில்லாமல் தனக்கு நன்மையைத் தரும் மொழியைக் கம்பீரமாகச் சொல்லத் தொடங்கினாள். "ராம, அரசருக்கு ஒருவித கோபமும் இல்லை. அவருக்குத் துக்கமும் இல்லை. ஆனால் அவருடைய மனத்தில் ஒன்றிருக்கின்றது. அதை உனக்குப் பயந்து வெளியிடாதிருக்கின்றார். எப்பொழுதும் உன்னிடத்தில் அதிக அன்பாயிருந்து இப்பொழுது அன்பற்ற சொல்லைச் சொல்லுவதற்கு அவருடைய நா எழவில்லை. எனக்குத் தசரதர் வாக்களித்திருக்கின்றார். அதை நீ அவசியம் முடித்துக் கொடுக்கவேண்டும். உன் தந்தை முன்னொருகால் என்னைக் கௌரவித்து எனக்கு "வரத்தைக் கொடுத்தேன்" என்று சொல்லிவிட்டு இப்பொழுது சாதாரணமான மனிதன்போல் பச்சாத்தாபப்படுகிறார். இவ்வெட்டுத் திசைகளையும் தமக்குள் அடக்கி ஆளுகின்ற மன்னவர், நான் வரம் கேட்க "கொடுத்தேன்" என்று முதலிற் சொல்லிவிட்டு, இப்பொழுது, வெள்ளம் கடந்துபோன பின்னர் அணை கோலுகின்றார். ராம, 'சத்தியம் தருமத்திற்கு மூலம்' என்பது எல்லாரும் அறிந்த விஷயமே. ஆகையால், 'உனக்குக் கேடாக முடிகின்றது' என்று என்மேற் கோபங்கொண்ட மன்னவர் சத்தியத்தைத் தவிராதவாறு செய். அரசர் உன்னைப் பார்த்துச் சொல்லப் போகின்றது, உனக்கு நன்மையைத் தருவதோ தீமையைத் தருவதோ, எப்படி இருந்தாலும், அரசர் சொல்லை வீணாக்காமல் அவசியம் செய்வேனென்று நீ ஒப்புக் கொள்ளுவாயாகில், நானே அதைச்சொல்லுகின்றேன். அவர் ஒருபொழுதும் உன்னிடத்திற் சொல்லமாட்டார்" என்றாள். இவ்வாறு இவள் சொன்னதைக் கேட்டு, இராமர், மிகவும் மனம் நொந்து, தமது தந்தையாருடைய எதிரில் அவளைப் பார்த்து, "ஓ! ஓ!! என்னைப் பார்த்து இவ்வாறு நீர் சொல்லக்கூடாது. என்னை 'நெருப்பில் குதி' என்றாலும் உடனே குதிப்பேன். 'விஷத்தைக் குடி' என்றாலும் குடிப்பேன். 'சமுத்திரத்தில் முழுகு' என்றாலும் முழுகிவிடுவேன். என் பிதாவின் கட்டளை என்றால் எனக்குப் போதும். அவர் எப்பொழுதும் எனக்குக் குரு; தந்தை அரசர்; எனது க்ஷேமத்தையே விரும்புபவர்; ஆகையால், அம்மா, தந்தையாருடைய கருத்தைச் சொல்லும்: அவசியம் நான் செய்துமுடிக்கின்றேன். பிரதிக்ஞை செய்கின்றேன். இதுவரையிலும் இராமன் இருவகையாகச் சொன்னதேயில்லை" என்றார். நேர்மை யுடையவரும் சத்தியத்தைக் கூறுகின்றவருமான இராமரைப் பார்த்து, மகாபாவியாகிய அந்தக் கைகேயி, தனது எண்ணத்தை வெளியிடுபவளாய், "முன்னொரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உண்டான சண்டையில் பாணத்தாற் புண்பட்ட உனது தந்தையாரை நான் காப்பாற்றினபடியால், அவர் எனக்கு இரண்டு வரங்கொடுத்தார். அவைகளில் ஒன்றால் 'பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கவேண்டும்' என்றும், இரண்டாவதால் 'இன்றையத்தினமே இராமன் தண்டகாரணியத்திற்குப் போகவேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டேன். நீ, உன்னையும் உனது தந்தையையும் உண்மையில் நடப்பவர்களாகச் செய்யவேண்டுமென்று எண்ணினாயாகில், நான் சொல்லுகின்ற வண்ணஞ் செய்யக்கடவாய். உனது தந்தையாரின் சொற்படி நீ பதினான்கு வருடம் தண்டகாரணியத்திற்குச் சென்று அங்கிருக்கக்கடவாய். உனது அபிஷேகத்திற்காக வந்திருக்கும் பொருள்களினால் பரதனுக்கு அபிஷேகத்தை நடத்த இசைவாய். அபிஷேகத்தை விட்டுப் பதினான்கு வருடகாலம் நீ தண்டகாரணியத்தில் உனது தலைமயிரைச் சடைகளாகத் திரித்துக்கொண்டும், மான்தோல் உடுத்துக் கொண்டும் வாழ்ந்து வரக்கடவாய். சகலவித ரத்தினங்களும் நிறைந்து, குதிரைகள், இரதங்கள், யானைகள் இவைகளுடன் கூடிய இப்பூமியைப் பரதனே இந்தக் கோசல நாட்டில் அரசாளட்டும். இவ்விரண்டு வரங்களைக் கொடுத்த காரணத்தினாலேதான் மன்னர், பரிதபித்துக் கொண்டு துக்கத்தால் முககாந்தி குன்றி, உன்னைக் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கும் மனம் பொறாதவராக இருக்கின்றார். தசரதருக்குப் பிள்ளாய், நீயும் உனது தந்தையாரின் சொற்படி நடந்து, அவரையும் சத்தியத்தின் கரையை அடைந்தவராகச் செய்துவைப்பாயாக" என்றனள்.

இவள் இவ்வண்ணம் வெகு கடினமாகச் சொன்னதைக் கேட்டு இராமர் சற்றேனுந் துக்கப்படவே யில்லை. ஆனால் மகானுபாவரான அவருடைய பிதாவாகிய தசரதர், 'இவள் சொன்னதைக் கேட்டுத் தமது புத்திரன் தம்மை விட்டுப் பிரிந்து போகின்ற சமயம் வந்துவிடும்போல் இருக்கின்றதே!' என்று நினைத்து முன்னையினும் அதிகமாக வருந்தினார்.

இவ்விதமாக மரணத்துக்கொப்பான கடுஞ்சொற்களைக் கைகேயி சொல்லக் கேட்டு, பகைவெல்லும் வலி படைத்த இராமர், சற்றும் வருத்தமடையாது, அவளைப் பார்த்து, "பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கட்டும். நான் எனது தந்தையார் உமக்கு வாக்குக் கொடுத்தபடி தலைமுடியை ஜடையாகத் திரித்துக்கொண்டும் மான்தோல் உடுத்துக் கொண்டும் வசிக்க, இவ்விடத்தைவிட்டுக் காட்டிற்குப் போகின்றேன். ஆனால், இது மாத்திரம் எனக்குத் தெரியவேண்டும்; பிறரால் வெல்ல அரியராயும் பகைவரை வேருடன் களைபவராயுமிருக்கும் அரசர் எப்பொழுதும் போல ஏன் என்னிடம் மகிழ்ந்திருக்கவில்லை? நீர் எளிமையடையவேண்டாம். உமது முன்பாக நான் அவசியம் காட்டிற்குச் சென்று ஜடைதரித்து மரவுரி யுடுத்து வசிக்கின்றேன். நீர் மகிழ்ச்சியடையும். எனக்கு நன்மை செய்பவராயும், பிதாவாயும், நன்றி யறிந்தவராயும், குருவாயும், அரசராயுமிருக்கும் இவரால் விருப்பத்தோடு ஏவப்படின், நான் எதைத்தான் அச்சமின்றிச் செய்யமாட்டேன்? இது ஒன்று தான் என் மனத்தை மிகவும் வருத்துகின்றது; என்னிடத்

தில் நேராக என் தந்தையார் ‘பரதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்க வேண்டும்’ என்று ஏன் சொல்லக் கூடாது? நானே சீதையையும் இராச்சியத்தையும் விருப்பத்திற்கிடனுன உயிரையும் பொருளையும் ஒருவருடைய ஏவலுமில்லாமல் மனமுவந்து எனது சகோதரர்களுக்குக் கொடுத்துவிடுவேன். உமது வாக்கைக் காக்கும்படி உம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும் பொருட்டு அரசர் என்னை ஏவினால் பரதனுக்கு நான் கொடுப்பதைப்பற்றிக் கேட்கவேண்டுமோ? ஆகையால், நீர் இனி அரசரைத் தேற்றிவைப்பீராக. எதற்காக அவர் தலைகுனிந்து தரையில் தாரையாகக் கண்ணீர் வடிக்க வேண்டும்? தூதர்கள் அரசருடைய கட்டளையால் இப்பொழுதே அதிவேகமாகச் செல்லுங் குதிரைகளி லேறி மாமன்வீட்டிலிருந்து பரதனை அழைத்துவரச் செல்லட்டும். இக்கணமே நானும் ஆலோசியாமல் இங்கிருந்து தண்டகாரணியத்தில் எனது தந்தையார் ஆஜ்ஞைப்படி பதினான்கு வருடகாலம் வசிக்கச் செல்கின்றேன்” என்றார்.

இதைக்கேட்டுக் கைகேயி, இராமர் காட்டிற்குப் போய் விடுவார் என்ற நம்பிக்கையால் களிப்படைந்து, அவரை விரைவிற் போகும்படி சொல்லலுற்றாள். “ராம, ஆகட்டும்; பரதனை மாமன் வீட்டிலிருந்து விரைவில் அழைத்து வர, வெகு வேகமுள்ள குதிரைகளின்மேல் இக்கணமே தூதர்கள் போகின்றார்கள். நீயும் இவ்வளவு ஆவலுடன் இருப்பதால் தாமதிக்காமற் சீக்கிரங் காட்டிற்குப்போ. அரசர் வெட்கத்தினால் உன்னிடத்திற் பேசுவதற்கு மனம் எழாமல் இருக்கின்றார். இதற்கு வேறு காரணஞ் சிறிதுமில்லை. ஆகையால் இதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நீ இந்த நகரை விட்டுக் காட்டிற்குப் போகின்றவரையில் உனது தந்தையார் ஸ்நானஞ் செய்யமாட்டார்; போசனமுஞ் செய்யார்” என்று இவ்வாறு சொன்ன கைகேயியின் அசத்தியமான வார்த்தையைக் கேட்டுத் தசரதர், எனக்கு என்ன கஷ்டம்!’ என்று சொல்லிப் பெருமூச்செறிந்து பரிதபித்து மூர்ச்சை அடைந்து, பொன்னால் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் விழுந்தார்.

இராமர், அவரை உடனே எடுத்து இருத்தி, உயர்ந்த குதிரையைச் சம்மட்டியால் அடித்தால் அது ஓடுதற்கு எவ்வளவு விரையுமோ அதுபோல் கைகேயியினது சொல்லென்றசம்மட்டியால் காட்டிற்குச்செல்ல விரைந்து, அவள் சொல்லிய கடினமாயும் அப்பிரியமாயுள்ள சொற்களாற் சற்றேனும் மனவருத்த மடையாது, அவளைப் பார்த்து, “அம்மா, என்னைப் பொருளாசை கொண்டு உலகத்தில் வாழ்வதற்கு எண்ணங் கொண்டவனாக நீர் நினைக்கவேண்டாம். தருமம் என்பதையே எப்பொழுதுங் கைப்பற்றியிருக்கின்ற என்னை ரிஷிக்கொப்பானவர் என்று எண்ணுவீர். எனது தந்தைக்கு மகிழ்ச்சியை விளைவிக்கப் பிராணனைக் கொடுக்கவேண்டுமென்றாலும் அவ்வண்ணமே செய்வேன். இவ்வுலகத்தில் ஒருவனுக்குத் தந்தையாரிடத்துப் பணிந்து பணிவிடை செய்து அவரது சொற்படி நடப்பதினும் உயர்ந்த தருமம் வேறொன்றும் இல்லை. நான் அவர் சொல்லாமலிருந்தாலும் உமது சொற்படி ஜனங்களற்ற காட்டில் பதினான்குவருஷம்வசிப்பேன். அம்மா, கைகேயி, என்னை அடிமைபோல் ஏவ உமக்கு அதிகாரமிருந்தும் ‘பரதனுக்கு அபிஷேகஞ் செய்யவேண்டும்’ என்று அரசரிடத்திற் கூறினீர். ஆதலால், என்னிடத்தில் நீர் பண்பு உள்ளதாகக் கருதவில்லைபோலும். நான், எனது தாயாராகிய கௌசலையிடம் விடைபெற்று, சீதைக்கு நல் வார்த்தை சொல்லிவிட்டு, இப்பொழுதே தண்டகாவனத்திற்குப் போகிறேன்; விரைவிற் பரதன் இராச்சியத்தையடைந்து பிதாவுக்குப் பணிவிடைகளைச் சரியாய் நடத்தி வரும்படி நீர் செய்வீர். இதுதான் என்றும் அழியாத தருமம்” என்றார்.

இவ்வாறு இராமர் சொன்னதைக் கேட்டுத்தசரதர், சிறிதும் பொறுக்கக்கூடாத துக்கத்தினால் வாய்விட்டுப் பேசநா எழாமல் உரத்த சத்தத்துடன் அழுதார். மிக்க ஒளியையுடைய இராமர், மனமயங்கிய தசரதரையும் நீதியற்ற கைகேயியையும் வலம்வந்து நமஸ்காரஞ்செய்து அவ்வந்தப்புரத்தைவிட்டு வாயிலில் வந்தவுடன் தமது சிநேகிதர்களைக் கண்டார். சுமித்திரைக்கு ஆனந்தத்தை வளர்ப்பவரான லக்ஷ்மணர் வெகு சினங்கொண்டவராய் நீர் ஒழுகுங் கண்களுடன் அவ்விராமர் பின்னே நடந்துபோனார். இராமர், அபிஷேகத்திற்குரிய பொருள்களெல்லாம் நிறைந்திருந்த மண்டபத்தை வலம் வந்து அதிற் கண்வைக்காமல் பரதனுடைய பட்டாபிஷேகத்தைப் பிரார்த்தித்தவராய் மெல்ல நடந்தார். உலகத்திலுள்ள ஜனங்களெல்லாருக்குங் குளிர்ந்தவரா யிருக்கும் இராமருக்கு உண்டான இராச்சிய நஷ்டமானது, சந்திரனுடைய ஒளியை இரவு குறைக்காதது போல், அவர் முகத்தில் விளங்கிய ராஜலக்ஷ்மியின் அழகை குறைக்கவில்லை. இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குப் போய்விடுவதால், அவருடைய மனத்தில் யாதொரு விகாரமும் துறவிக்கு எவ்வாறு தோன்றாதோ அதுபோல் தோன்றவில்லை. தம் மனத்திலிருக்கும் வருத்தத்தை ஒருவாற்றானும் வெளியிற் காட்டாத இராமர், சுபமான குடை, அலங்கரிக்கப்பெற்ற சாமரை இவைகளை அகற்றி, தேர், தம்முடன்வந்த அன்பர்கள், நகரத்தார், மற்றுமுள்ள சாதாரண ஜனங்கள் இவர்களெல்லாரையும் அனுப்பிவிட்டு, கேட்பதற்கு வருத்தத்தை யுண்டாக்குஞ் சங்கதியைத் தமது தாயாருக்குத் தெரியப்படுத்த அவள் மாளிகைக்குப் போனார்.

நான்கு பக்கத்திலுமிருந்த செல்வவான்களான ஜனங்களுள் ஒருவராவது, சத்தியவாதியாயும் காந்தியுடையவராயுமிருக்கும் இராமரது முகத்தில் ஒருவிதமான விகாரத்தையும் அறியவில்லை. சரத்கால சந்திரன் இயற்கையான காந்தியை விடாதவாறுபோல் தமது இயற்கையான மகிழ்ச்சியை இராமர் ஒரு சமயத்திலும் இழக்கவே இல்லை. இயல்பாகவே தைரியமுள்ள இராமர், தமது மதுரமாகிய வாக்கினால் ஒவ்வொருவரிடமும் மரியாதையாகப் பேசிக்கொண்டே தமது தாயாரின் சமீபத்திற் புகுந்தார். ஒவ்வொரு குணத்திலும் அவருக்கு ஒப்பானவரும் மகாவீரருமான லக்ஷ்மணரும், தமது துக்கத்தை அடக்கிக்கொண்டு அவர் பின்னே சென்றார். இராமர், புகுந்து, அங்கிருந்த ஆனந்தத்துடன் கூடிய ஜனங்களையும், தமக்குவந்திருக்குந் துன்பத்தையும் ஆலோசித்து, ‘தமது நண்பர்கள் துக்கப்பட்டுப் பிராணனை விட்டிடுவார்களோ!’ என்ற அச்சத்தால் ஒருவிதமான விகாரத்தையும் அடையாதிருந்தார்.”

தயரதன் நிலையைக் கண்ணுறுமலே இராமனைக் காட்டகம் போக்கினார் கம்பர். “இராம, உந்தையுனக்கு ஏவிய தொன்றுளது உரைக்கவோ” என வினவிய கைகேசிக்கு இராமன், “தந்தையுந் தாயும் நீரே, தலைநின்றேன் பணிமின்” என உறுதி கூற, “ஆயின், எழிரண்டாண்டு நீ அடவி சென்று, மீளுதி” என்று கைகேசி விதித்ததன்மேல், “இப்பணி தலை நின்றேன், விடையுங்கொண்டேன்” எனப்பகர்ந்த வாங்கே அன்றலர்ந்த செந்தாமரையை வென்ற முகத்தினோடும் அவ்விடம் விட்டகன்றனன் இராமன் என்பது கம்ப நூலின் வரலாறு. சொற்கள் மிகச் சிலவேனும் அவைகளை ஒளிமிகு வர்ணங்களாய் இயைக்கூட்டித் தன் சித்திரத்தைத் தீட்டினார் கம்பர். தீட்டிய அச்சித்திரத்தின் ஒவ்வோருறுப்பும் உறு பொருள் ஓராயிரம் உரையாமல் உரைக்கின்றன. பலபடி யாவரையும் பேசவைத்த வான்மீகி முனிவரோ, இறுதியில்,உரைக்கப் பெற்றது யாதெனத் தெளிவதே அருமையாக்கி விடுகின்றார்.

தயரதன் செவிப்படக் கைகேசி கொடுஞ்சொல் வழங்குவதும் அவன் கண்ணெதிர் நின்று இராமன் வனமேக வழிக்கொள்வதும் அவலச்சுவையை அதிகப்படுத்துவது உண்மையே. ஆயினும் அதற்குமோர் வரம்பு வேண்டும். ஓதுவோர் உள்ளத்தைத் துன்பத்தால் ஒரு வண்ணம் உழக்கலாமேயன்றி அதனை முழுவதும் உடைத்துவிட லாகாது. உடைந்து தகர்ந்துவிடுமேல் இனி வருவதை உட்கொள்ளுவதெங்ஙனம்!

அண்ட புராணம்

[3-வது வால்யூம், 14-வது பக்கத் தொடர்ச்சி]

தமிழ் வளர்ப்போர் திறமுரைத்த படலம்.

‘அண்ட புராணம்’ என்னும் பெயரின் கீழ், நகைச் சுவை பொலியுமோர் போலிக்காவியத்தின் படலங்கள் சில நம் நேயர்களால் அவ்வப்போது புனையப்பெற்று இவ்விதழ்களில் தோன்றி வருவதைக் கலாநிலய வாசகர்கள் மறக்கமாட்டார். இவ்வரிய புராணத்தின் ஏட்டுப்பிரதிகள் எவர் கைக்கேனும் எட்டுமாயின் எமக்கனுப்பி உதவும்படி யாம் விளையாட்டாக வேண்டிக் கொண்டிருந்ததற்கிணங்க ஸ்ரீமான். டி. டி. கிருஷ்ணகாந்த முதலியாரவர்கள், கீழ்க்காணும் நிருபத்துடன் அண்ட புராணத்தின் புதுப்படலம் ஒன்று எமக்கு அனுப்பியிருக்கின்றனர்:—

‘ஆசிரியர்’

கொட்டைமுத்தூர். பிரஜோற்பத்தி, சித்திரைமீ 1௳

“பெருமைசால் கலாநிலயத்தின் ஆசிரியரவர்கட்கு, கருட நாதன் வணக்கம் பல.

தங்களுடைய ஊக்கத்தால், தூங்கிக் கிடக்கும் அண்ட புராணத்தைத் தட்டியெழுப்பியதன் பயனாய் வெளிவந்த பல படலங்களில் சென்ற ஆண்டு முதலில் தோன்றிய கொதுகின் கதியுரைத்த படலத்தைப் படித்ததிலிருந்து அப்புராணத்தின் அருமைக்கு அடிமையாகி நானும் ஒரு படலத்தை உலகடங்கலுந் தேடியேனுங் கண்டுபிடித்துத் தரவேண்டுமென்னும் பேரவாக் கொண்டு அது நிறைவேறுமாறு என் குல தெய்வத்தின்பால் வரங்கிடந்தேன். உலகனைத்தும் அவரவர் உள்ளத்திலேயே அடங்கியிருக்கின்றதென்ன நீர் ஒல்லும் வகையெல்லாம் உரைத்துரைத்து என்னைத் தெருட்டியிருப்பினும் அதனை அறவே மறந்து, படலமொன்று கிடைப்பதெங்கே யெங்கே யென நான் புறத்தே அலைந்து தேடிய நாட்களும் இடங்களும் பலப்பல. மடாதிபதிகளனைவர்க்குங் கடிதங்கள் விடுத்தேன். ஊரூராய்ச் சென்று புலவன் என்ற பேர் பூண்டிருந்தவர்களைப் பாட்டனுப்பெற்றிருந்தும், வக்கீல் குமாஸ்தாக்களும் டிகட் கலெக்டர்களும் போலீஸ் சேவகர்களும் கள்ளுக்கடை அபிமானிகளுமாய் மாறிவிட்ட பேரன்மார் வசிக்கும் வீடுதோறும் வாயில் வேண்டிப் புகுந்ததற்கோ குறையில்லை. வெண்பாப் புலிகள் வசித்த வீட்டில் இப்பொழுது கர்த்தபத்தின் வாலுந்தோலும் காதுகளுமே கிடந்தன. தமிழ்ச்சங்கங்கள் நூல் நிலையங்கள் அனைத்தையும் துழாவினேன். அண்ட புராணத்தின் துண்டமொன்றும் அகப்பட்டபாடில்லை. ஆயினும்என் ஊக்கம் சோர்ந்திலது.

இவ்வாறிருக்க ஒருநாள், விளையாவயல் நெல்லூரில் வசிப்பவரும் குன்னியூர் நரசேகரப் பாவலர் வமிசத்தவரும்,‘ ஸஹஸ்ராவதானம் சரமகவிராயர் மாணவரும், ‘காடி வெண்பா’ ‘எலிவிருத்தம்’ முதலிய அரிய நூல்களின் ஆசிரியரும் எனது உயிர் நண்பருமாகிய பல்லிச்சாமி பிள்ளையவர்கள், தாம் அரிதின் இயற்றிய ‘விளையாவயல் நெல்லூர்ப் புராணத்தை’ அச்சுவாகனமேற்றி ஆர்வமுடன் காத்திருக்கும் தமிழுலகிற்கு அளிப்பதற்குப் போதுமான பொருளுதவி வேண்டி என்வயின் வந்தடைந்து, நான் (உவந்து?) தந்த நன்கொடை நூறு ரூபாயும் போதாமல், மறுநாள், பட்டயம்பாக்கத்தில் நிகழநின்ற தமிழ்த்தொண்டர் மகாநாட்டிற்கு யான் சென்று, ஓர் உபன்யாசஞ் செய்து, அவ் வுபன்னியர்சத்தினிடையே, அவர் பிரசுரிக்கக் காத்திருந்த விளையாவயல் நெல்லூர்ப் புராணத்தின் சிறப்பைச் சிறிது பாராட்டிப் பேசி அதற்கு யாவரும் பொருளுதவி செய்யும்படி யான் வற்புறுத்த வேண்டுமென்றும் அழைத்தார். முதலில் யான் ஒவ்வவில்லை. ஆயினும் அண்ட புராணத்திற்கு யான் அலைகின்ற தன்மையை அறிந்த அவர், “அங்குப் புலவர்களும் பண்டிதர்களும் எண்ணிறந்தோர் வரலாவார். கலா நிலயப் பத்திரிகையில் வரும் வர்த்தமானங்களைக் காட்டிலும் எத்தனையோ பண்டைய செய்திகள் அவர்கள் அறிந்தவர்களாதலால், நீர் தேடுகின்ற அண்ட புராணத்தைப்பற்றி அன்னார் ஏதேனும் இயம்ப இயலினும் இயலலாம்” என எடுத்துக் காட்டவே அம்மாகாநாட்டிற்குச் சென்றேன்.

ஆங் எண்ணிலாப் பண்டிதர் வந்திருந்தனர். திவான் பகதூர். K. D. விக்ரமசேன ராவ் B. A. B. L. M. L. C. அவர்கள் தமிழ்த் தொண்டர் மகாநாட்டிற்குத் தக்கபடி தலைமைவகித்து, தன் பேர் ஒரு ‘ராவ்’ ஆக இருந்தாலும் ஆதியில்தான் தமிழரே என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகின்றாரென்றும், மிகவும் முக்கியமான அம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக்கூடிய பெரியோர் பலரிருக்கத் தனக்கு அப்பதவி அளித்ததற்கு மிக்க வந்தனம் உரியதாயிருக்கின்றதென்றும் ஆங்கிலத்தில் கூறிப்பிறகு தமிழர் மகாநாட்டில் ஆங்கிலத்தில் பேசுவது வெட்கக் கேடான விஷயம் என்பதைத் தெரிவித்துத் தற்போது தன் தாய்ப்பாஷையாயிருந்த கன்னடத்தில் பேசத்தலைப்பட்டவர் அதுவும் இயலாமை கண்டு, தான் ஹிந்தி பாஷையும் பயின்று வருகின்றாராதலால் அந்தப் பாஷையில் பேசுவதே தேச பக்திக்குத் தக்கதென வற்புறுத்தி அரைமணி நேரம் முக்கால் முழங்கி விட்டார். எனக்கு இந்த ‘ஹிந்தி’ பாஷை இன்னுந் தெரியாது. ஆதலால் அவர் அறைந்த அரும் பொருளுரை இன்னதென்று யான் அறியாததுடன் அவருக்குந்தான் தெரிந்ததோ என்னச் சோதிக்கவும் வகையில்லை.

மெல்ல மெல்ல எனக்கோ தூக்கம் வரத்தலைப்பட்டது. அக்கிராசனாதிபதி தன் முன்னுரையை முடித்து உட்கார்ந்தபின், அம்மகாநாட்டின் காரியதரிசி மேடை மீதேறி, தமிழில் மிகுந்த அபிமான முடையவரும் சட்டசபை அங்கத்தினராயு மிருக்கின்ற ஒருவரைத் தலைவராகப் பெற்றிருக்கின்ற அந்த நல்ல சமயத்தை வீணாக்காமல், எல்லாரும் வந்து தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லித் தமிழும் தமிழ்ப் பண்டிதரும் முன்னேற்ற மடைவதற்குரிய திட்டங்களை அன்று ஒருவருக்கு ஒருவர் மாறுபாடின்றி ஓரே மனதாய்ப் பிரேரேபித்து ஆமோதித்து நிறைவேற்றி விடுவார்களானால் பிறகு எல்லாருக்கும் நற்கதி பிறக்கும் என்பதில் சந்தேகமே இல்லை என்னச் சாற்றி, தலைவரிடத்தில் ஏதோ சொல்லிவிட்டு (அவர் சிரித்தார்) இறங்கிவிட்டார். இதன்மேல் சொற்பொழிவுகள், ஆரம்பித்தன.

(தொடரும்)

சென்னை-600 008

நோயற்ற : : : : வாழ்வே	ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்	குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளைநீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்ருத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி,கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதும் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனும். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனும்! இனும்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்ருத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனு பஜார், மதராஸ்.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினுலும், ஓர் அபூர்வ மூலிகையினுலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர,எவ்வித காரியங்களிலும்வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிருர்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ. 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபசர். கா. கோவிந்தாச்சார்,
மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218,தங்கசாலை, மதராஸ்.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:- **NATIONAL INSURANCE BUILDINGS**
7, Council House St, Calcutta.

PHENOMENAL PROGRESS

Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering

This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—

113, Armenian St, Madras. } **T. ANANTACHARI**, B.A.,
Branch Secretary.

- நவீன பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்ருவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா	ரூ. **200**
வெளி நாடு ,,	ரூ. **280**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. சுப்ரமணியம்.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி,இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி,கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம்,குணம்,நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம்பொடி வீசை ரூபா 3½.

டாக்டர் B. S. மல்லையா M.B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணு 4. டஜன் ரூபா 2¼ ஷைஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பேனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி,மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கில்லாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வரைக.

விலை:—(தபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.

எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

நீங்கள் "அமிர்தகுணபோதினி" யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப்பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து எல்லாம் அநுபவம் எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும் கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0.

மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனும்.

புரோப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

அருமையான பொடி ! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.
புரோப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.
தபால் பெட்டி, நெ:—156

பிறர் கைப்பட்ட
சமையலென்ற பழியில்லை

ஆர் கைப்பட்டதோ, ஆர் பார்த்ததோ, ஆர் சமைத்ததோ என்று கூசிக்கூசி உண்ணுமல் விடுபவர்கள் மனரம்மியத்துடன் உணவு உண்ணக்கூடிய வழிகாட்டும் துணை

ருக்மணி
குக்கர்

தாங்கள் தாங்களே வேண்டியபடி, வேண்டும்போது தம் கைகளாலே, தொந்தரவு இல்லாமல் சமைத்துக் கொள்ளலாம். 1, 2, 4, 6, 8, 12, 16, பேர்களுக்கு ஏழு அளவுகளில் ரூ. 12, 16, 20, 25, 31, 37,44-ல் உண்டு. விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம் (12) சென்னைப்பட்டினம்,

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம் !

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 328, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.
விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.
எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9. பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

லண்டனில் மறுமுறை கூடும் வட்டமேஜை மஹாநாட்டிற்குக் காந்தியடிகள் ஒருவரே காங்கிரஸின் பிரதிநிதியாகச் செல்வார் என்று தெரிகின்றது.

***

இவ்வருடக் காங்கிரஸ் செய்த முடிவை ஜனங்களினிடம் பரப்பவும், கதர் வளர்ச்சிக்கென்றும், கிராமச் சீர்திருத்தத்திற்கென்றும் பிரசாரம் செய்யும்பொருட்டுத் தமிழ்நாடுக் காங்கிரஸ் கமிட்டியார் ஒருபிரசாரக் கமிட்டியை நியமித்துள்ளனர். டாக்கர் ராஜன், ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதலிய பலர் பிரசாரம் செய்யத் துவக்குவார்கள் என்று காங்கிரஸ் கமிட்டியார் அறிவிக்கின்றனர்.

***

அமெரிக்கா நியூயார்க் நகரத்தில் ஐம்பது அறுபது அடுக்கு மாடிகள் உள்ள மாளிகைகள் அநேகம் இருக்கின்றன. இப்பொழுது அங்கே 105 அடுக்கு மாடிகள் உள்ள ஓர் அற்புத மாளிகை கட்டப்பட்டிருக்கின்றது. உலகத்திலேயே தற்காலத்திலுள்ள எல்லாக் கட்டடங்களினும் இம்மாளிகைபெரிது. ஒருஅழகான நகரத்தைப்போல இருக்கிறது. அதில் சுமார் 40000 ஜனங்கள் வசிக்கிறார்கள். அதனை ஒரு அழகான நகர மென்றே சொல்லலாம். இம் மாளிகை 1050 அடி உயரம் உள்ளது. இதைக் கட்டச் செலவழித்த தொகை 15 கோடி ரூபாயாகும். இம்மாளிகை உச்சியிலிருந்து பார்க்கும் அயல் தேசத்துப் பிரயாணிகள் நியூயார்க் நகர அமைப்பையும் ஜன நெருக்கத்தையும் அகன்ற வீதிகளையும் அழகான கடைத்தெருக்களையும் பார்க்கலாம்.

***

டாங்கூவில் கும்பாபிஷேகம்:—நீர்வளம் நெல்வளமாதிய பல்வளம் நிறைந்து, அயிராவதி நதியால் அழகுறப் பெற்று, பொன்னுடெனத்திகழ் நன்னாடாகிய பர்மிய நாட்டில் நடு நாயகமாக விளங்கும் டாக்கோ என்னும் நலந்திகழ் நகரின்கண் அன்பர்கள் போற்றி இன்புறும் வண்ணம் திருக்கோயில் கொண்டருளும் பரங்கருணைத் தடங்கடலாகிய ஸ்ரீ மீனாட்சியம்மை சமேத சொக்கலிங்க மூர்த்தியின் ஆலயம், பழமையாகவும் சிறிதாகவும் இருந்ததை முன்னிட்டுப் பரம்பரையாகச் சிவாலயத் திருப்பணியாதிய சிவ புண்ணியங்களைக் குல தருமமாகக் கொண்டுள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார்களால் மேற்படி ஆலயத்தைத் திருவருட் டுணைகொண்டு புதியதாகவும் கர்ப்பக்கிரக அர்த்த மண்டப மகாமண்டப விமான கோபுரமாதியன சிற்ப நூன்முறையே பொற்புற அமைத்து மூத்த பிள்ளையார், முருகவேள், மீனாட்சியம்மை, சொக்கலிங்கமூர்த்தி, சண்டேசுராதிய மூர்த்திகட்கும் பிரஜோற்பத்தி வருஷம் சித்திரை மாதம் 11-ந் தேதி (24-4-31) வெள்ளிக்கிழமை சுக்கிலபக்ஷ சப்தமிதிதி புனர்பூச நக்ஷத்திரம் கூடிய நன்னாள் உதயாதி 7-க்கு மேல் $1\frac{1}{4}$ நாழிகைக்குள் மிதுனலக்ன நல்ல வேளையில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பெறுவதால் சிவநேசச் செல்வர்கள் சுற்றமுந் துணையுஞ் சூழ்தர முன்னரே வந்திருந்து, மகா கும்பாபிஷேக மகாவைபவங்களும், அன்று ராத்திரி ஐம்பெருங் கடவுளர் திருவுலாக் காட்சியும் கண்குளிரக்கண்டு எல்லா நலன்களையும் பெற்று இன்புறுமாறு ஒரு செட்டியார் அன்பர் அறிவிக்கின்றார்.

***

சமய வளர்ச்சி:— சைவ மதத்தினரான அன்பர் ஒருவர் திருநெல்வேலியி லிருந்து பத்திரிகைகளுக்குப் பின்வருமாறு எழுதி இருக்கின்றார்:— இப்பொழுது தமிழ் நாட்டில், சைவ [illegible] ராய் வாழ்வதை விடுத்து, மதத்திரு[illegible] என்ற [illegible] பேரால் கூடிக் கலந்து போரிட[illegible]னர். [illegible] ஸ்வாமி வேதாசலம், கா. சுப்ரமணிய பிள்ளை இவர்களைத் தலைவர்களாகக்கொண்ட ஒரு கட்சியார், வடமொழி நூற்களும், ஆகம முறைகளும் தேவையில்லை என்பர். திருநெல்வேலி வைதிக சைவ சம்மேளனத்தார், பண்டு தொட்டுவந்த வழக்கங்களே சரியென்பர். வைதிகக் கட்சியார், ஸ்வாமி வேதாசலத்தைத் தலைவராகக்கொண்ட கட்சியாரைப் பின்வரும் வினாக்களுக்கு தகுதியான ஆதாரங்களோடு விடையளிக்குமாறு கேட்டிருக்கின்றனர். அவ்வினாக்கள் பின்வருமாறு:—

1. சைவசமயத்துக்குப் பிரமாண நூல்கள் இப்பொழுது ஆட்சியிலிருந்து வரும் வேதாகமங்கள் தானா? வேறு நூல்களும் வேண்டுமா? வேதாகமங்களே வேண்டப்படாது புதிய நூல்கள் வேண்டுமா?

2. தமிழ்ச் சித்தர் நூலுக்கும் சைவசமயத்துக்கும் சம்பந்தம் என்ன?

3. சமயத்திற்குரிய பிரமாண நூல்கள் காலந் தோறும் மாறுபடுத்தப்படல் வேண்டுமா?

4. சமய நூல்களிற் கூறப்பட்டிருக்கும் விஷயங்களெல்லாம் இப்பொழுதுள்ள நம்முடைய அறிவுக்கு அநுபவமாய்ப் பொருத்தமாய் இருக்குமா? இல்லை என்றால் அவைகளைத் தவறானவை யென்று தள்ளி விடலாமா?

5. வேதங்கள் சைவ சமயத்திற்குப் பிரமாண நூல்களல்ல என்பதற்கு அவற்றின் உரைகளும் அவ்வுரைகளைப் பின்பற்றி வந்திருக்கும் மொழிபெயர்ப்புக்களும் சான்றாகுமா? வேதத்திற்கும் சிவாகமங்களுக்கும் சம்பந்தம் என்ன?

6. மொழிபற்றிய சமயம் உண்டா? சைவசமயம் தமிழ்ச் சமயமா? சைவசமயம் சம்பந்தப்பட்ட மட்டில் வடமொழி - தமிழ் - வியவகாரம் வேண்டுமா?

7. புராணங்களை வேதம் சிவாகமம் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் எடுத்தாளும் முறையில் நாம் செய்யவேண்டிய தென்ன?

8. ஆகமங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதவர்களுக்கு ஆகமக்கோவில்களில் சம்பந்தம் உண்டா?

9. ஆகமக்கிரியையும் ஆகமஞானத்தையும் பரப்புதற்கு ஏற்பட்ட மடாலயங்களை எம்முறையில் சீர்திருத்த வேண்டும்?

10. சைவர்கள் ஒரு சமுதாயத்தாரென்று சொல்லப்படு முறையில் கையாள வேண்டிய அனுட்டானங்கள் என்ன?

11. தற்காலத்தில் நவீனமாக நடந்துவரும் பின்வருபவைகளுக்குப் பிரமாணம் உண்டா? அவைகளை எல்லாரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது தானா? அதனால் பாதகம் உண்டா?

(1) தமிழ் மணவினை.

(2) ஆகமப்பொதுச் சிவாலயங்களில் மக்களின் மணம் நடத்துதல்.

(3) 'தமிழ் நான்மறை' ஒன்றிருந்ததென்று சொல்லப்படுதல்.

(4) 'ஹர ஹர நமப்பார்வதி பதயே' என்று பண்டு தொட்டு வழங்கிவரும் சிவநாமாவளியை வழக்கத்திலிருந்து நீக்குதல்.

(5) தென்னாடுடைய......இறைவா போற்றி' சீரார் பெருந்துறை நம்......மலைபோற்றி' என்ற அருமைத் திருவாசகச் சொற்றொடர்களை நாமாவளியாகக் கையாளுதல்.

12. தற்காலம்வரை சைவசித்தாந்தத்திற்குப் பிரமாணமாக ஆட்சியிலிருந்துவருகிற வடமொழி வேதம் சிவாகமம் புராண இதிகாசங்களும் தமிழ்ப் பன்னிரு திருமுறை, பதினான்கு சித்தாந்த சாத்திரங்களுமாகிய நூல்களைத் தற்கால ஆராய்ச்சியாளர் தங்கள் கொள்[illegible]க்குத் தக்கவாறு திரித்தும், புதிய [illegible] [illegible]யும் பழைய (வைதிகச்சைவ) [illegible] தைக்[illegible] இடர்ப்படவேண்டுமா?

188913

KALANILAYAM.
REG. NO. M. 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலே அணு 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலே வீதி, மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலே,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

ஸோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனே மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

மதுரை
காஞ்சீபுரம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ.	18—0—0
காரகேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)	10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது.	6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னே.

டாக்டர் எம். ஸி. நண்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்.

எம். ஸி. என். ஸ்நானத் தைலம்.

இது ஸ்நானத்திற்காகவே தயாரிக்கப்படுவது. இதில் சேர்ந்துள்ள மூலிகைகளும், எண்ணெயும் சாஸ்திரீயமானவை. தலே நோய்கள், கண்களில் ஏற்படும் சில வியாதிகள், உடம்பில் ஏற்படும் வலிகள் இதை உபயோகித்து வர ஒழிந்துபோம். காலஞ்சென்ற டாக்டரின் சிறந்த ஸ்நானத் தைலம் இதுவே. வக்கீல்கள், மாணவர்கள், மூளேயைக் கொண்டு பிழைப்பவர்கள் முதலியவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம். மூளேயைக் குளிரச் செய்து ஞாபகசக்தியை வளர்ப்பதில் ஒப்புயர்வற்றது. விபரகாட்லாக் இனும்.

6 அவுன்ஸ் புட்டி விலே ரூ. 1-0.0

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலே மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளே உபாசனே செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணுசலம் பிள்ளேயின் உரையுடன் விலே அணு 12.

3. கம்பராமாயணம்.பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளேத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலே ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலே ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலே ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளே ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலே அணு 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னே.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)